SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 மே 2026 ₹25
Volume : 46 Issue : 22
www.samarasam.net

தோற்கடிக்கப்பட்ட
## தொகுதி மறுவரையறை மசோதா - 2026

கோயில்களை இடித்த
## ஔரங்கஜேப்?



TRADITIONAL TRUST SINCE 1925

LKS

100 YEARS

உழைப்பவரின் வியர்வை உலரும்முன்
கூலியைக் கொடுத்து விடுங்கள்

– முஹம்மத் நபி(ஸல்) அவர்கள்


கதீட்ரல் ரோடு

L.K.S.

கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611




## உள்ளே...


7 **தலையங்கம்**
வெறுப்புக்குப் பலியாகாதீர்!

8 **சேயன் இப்ராகிம்**
தோற்கடிக்கப்பட்ட
தொகுதி மறுவரையறை
மசோதா - 2026

12 **வி.எஸ். முஹம்மத் அமீன்**
மேடை:
இன்னும் சொல்லப்படாத
கதைகள்

18 **அப்பாஸ் அல் ஆசாதி**
வெறுப்புப் பட்டியலைக்
குறைப்போம்

20 **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**
வாசிப்பை நேசிப்போம்!

22 **ப. அப்துர் ரஹ்மான்**
என்றென்றும் நிலநடுக்கம்

32 **பானு ஹமீத்**
பெண் என்னும் அருள்வளம்

34 **வி.எஸ். முஹம்மத் அமீன்**
நீதிக்கான பழிவாங்கல்

36 **நஸ்ரத் ரோஸி**
கோயில்களை இடித்த ஔரங்கஜேப்?

40 **ஏ.ஏ.ஹெச்.கே.கோரி**
சிறுகதை:
எங்க ஊரு ஆட்டோவில்
சிங்கப்பூருக்கு

44 **K.M. முஹம்மது**
கவிதை:
வழிகாட்டுதல்களும் புறக்கணிப்பும்

46 **ஜரீனா ஜமால்**
நாவல் : அக்கரைப் பச்சை

50 **அமீரா முர்ஷிதா**
மினாப் பள்ளிச் சிறுமிகளே
எமது பயணத் தோழர்கள்

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | : ரூ.550 |
| அரையாண்டு | : ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net




### வெறுப்பு நிலைக்காது

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் இந்தியநாட்டின் அடிப்படைத் தர்மம். சாதியால், மதத்தால் வேறுபாடு காண்பது மனித தர்மம் ஆகாது. அது வெறுப்பு அரசியல். வெறுப்பு ஒருநாளும் நிலைக் காது என்பதை உணர்ந்தால் அன்றாடம் உலகை உலுக்கும் போர் இருக்காது. இன்று என்னாகுமோ என்ற அச்சம் இருக் காது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பரந்த மனப்பான்மையோடு வாழ முயலுவோமாக!

– P. சௌந்தரராசன், கும்பகோணம்

### உலகின் கண்கள் திறக்கட்டும்

நீதி நேர்மையான அரசை உருவாக்கும் பொறுப்பு முஸ்லிம்களுக்கு உண்டு என்றும் அதை நிலைநாட்ட எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்குப் பங்களிப்பு உண்டு என்கிற குர்ஆனின் கருத்துகளை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் மௌலவி இஸ்மாயீல் இம்தாதி.

இறைவன் விரும்புகின்ற ஆட்சி முறை யைக் கொண்டு வர முஸ்லிம்களிடையே ஒற்றுமை மலர வேண்டும். இமாம்கள், அரசியல் தலைவர்கள் இதற்கு முயற்சி செய்ய வேண்டும். ‘இறைவன் என்னைக் கைவிட வில்லை என்கிற நம்பிக்கைதான் இறை நம்பிக்கையாளரை வழி நடத்துகிறது’ என்கிற கூற்று மூன்று முறை விபத்துகளிலிருந்து மீண்ட எனது வாழ்விற்கு நூற்றுக்கு நூறு பொருந்துகிறது. அஷ்ஷெய்க் அவர்களின் வரிகள் அனைத்தும் சிறப்பு.

மலாயாவின் மிகப் பெரும் ஆளுமை யான சையத் முஹம்மது அல் அத்தாஸ் அவர்களின் சிறப்புகளையும், அவர் இஸ்லாமிய அறிவுலகிற்குச் சிறந்த வழி காட்டியாகத் திகழ்ந்தவர் என்பதையும் அறியத் தந்துள்ளீர்கள். மேற்கத்திய சிந்தனை, நாகரிகம் எதுவும் மனிதகுலத்துக்கு ஒவ்வாதது என்கிற கூற்று அவருடைய எழுத்துகள் வழி உலகின் கண்கள் திறக்கட்டும்.

– S.A. சபீர் அஹ்மது,
ஆணைக்காரன் சத்திரம்

### ஈரானை வியக்கும் உலகம்

இஸ்லாத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை என்று கூறுபவர்கள் அடிப்படையை விளங்காதவர்களே! நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத் தலைவராக மட்டு மல்ல அரசியல் தலைவராகவும் வெற்றியுடன் திகழ்ந்தார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆட்சி முறை பற்றிய சட்டங்களை நபி (ஸல்) அவர்கள் வகுத்து நடைமுறைப் படுத்திக் காட்டியுள்ளார்கள்.

அரசியலில் ஈடுபடாமல் நம் முன் னோர்கள் எகிப்து, ஸ்பெயின், பாரசீகம் போன்ற பெரும் பிரதேசங்களை இஸ்லாமிய ஆளுகையின் கீழ் எப்படிக் கொண்டு வந் திருக்க முடியும்?

ஜிம்மி கார்ட்டர் சொன்னதைப் போலவே ‘எல்லாம் எங்களுக்குச் சாதகமாக இருந்தது. இறைவன் ஈரான் பக்கம் இருந்தார்’ என்று ட்ரம்பும் வார்த்தைகளைச் சொல்லக்கூடிய நேரம் இறையருளால் நெருங்கிக் கொண் டிருக்கிறது. ஏனெனில் அதர்மத்தை எதிர்த்து ஈரான் சமராடிக் கொண்டிருப்பதை உலகம் வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறது.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

### அறியாத பல செய்திகள்

உள்நாட்டு வெளிநாட்டு பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் சமரசம் தலையங்கம் உரத்துப் பேசுகிறது. இஸ்லாமும் அரசியலும் தேவையான நேரத்தில் தெளிவான ஒரு தொகுப்பு. அமெரிக்கா இஸ்ரேல் ஈரான் போரும் தீர்வும் நிறைய விஷயங்களைச் சொல்லிச் சென்றது பல ஐயங்களையும் கடந்த கால நிகழ்வுகளையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

'என் இனிய இளைஞர்களே!' இளைஞர்களுக்குத் தரமான அறிவுரை. ஆர்னிகா நாசரின் நேர்ச்சை ஒரு குடும்பத்தில் நடக்கும் சம்பவத்தை கண்முன் நிழலாட வைத்துவிட்டது. அரபுப் பெண்களின் உடை பழங்கால அறியாத விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. இதுபோன்ற தரவுகளை எதிர்பார்க்கின்றோம். கடைசிப் பக்கம் கனமான செய்திகள். ஈரான் மக்களுக்கு இறைவன் அருள் புரியட்டும்.

**- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்**

## அரிய கருத்துகள்

எழுத்தாளச் சகோதரர் தோழர் தமிழ்ச் செல்வனுக்கு மதிப்பு மிகுந்த சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட இருக்கும் இனிய அருமையான செய்தி சமரசத்தின் ஆசிரியர் குழுவினரின் வாழ்த்துகளுடன் வெளியிட்டுள்ளது பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது. நபிகள் நாயகம் போதித்த விலங்கு வளர்ப்பு குறித்து மாணவி சொன்ன கருத்துகள் அருமை, அரிய செய்திகள், பாராட்டுகள்.

**- கவிஞர் கடல் நாகராஜன், கடலூர்**

## நெதன்யாகுவுக்கு முடிவு வரட்டும்

ஃபலஸ்தீனர்களின் மீது கொடூரமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டு இனப்படுகொலை செய்ய நெதன்யாகுவைத் தவிர்த்து வேறொரு நபர் யூதர்களிடையே இப்போதைக்கு இல்லை.

சர்வதேச போர்க்குற்றவாளியாக முத்திரை குத்தப்பட்டும், சியோனிச அரசில் மிகவும் மோசமான ஊழல் பெருச்சாளியென வழக்கு நிலுவையில் இருந்தும் ஃபலஸ்தீனப் பிரச்னை ஒன்றை வைத்துத்தான் தன்னை நிலைநிறுதிக் கொண்டு வருகிறார். நெதன்யாகு மாற்றப்பட்டால் போர் தானாக முடிவுக்கு வரும்.

படித்து சிந்தித்தால் கண்ணீர் வரும் கவிதை காஸாவின் கதையாடலும் நன்றாக அலசி ஆராய்ந்து எழுதப்பட்ட முதல் பரிசுக் கட்டுரையும் சமரசத்திற்கு சிறப்பு சேர்த்தது.

**- அ. சாகுல் ஹமீது, குளச்சல்**

## விருதுக்குத் தகுதியானவர்

தோழர் தமிழ்ச்செல்வன் இலக்கியக் குடும்பத்திலிருந்து வந்தவர். தரமான நூல்களை எழுதியவர். களச் செயற்பாட்டாளர். சாகித்ய அகாடமி விருதுக்கு மிகவும் தகுதியானவர். தோழருக்கு வாழ்த்துகள். ஈரானை அமெரிக்கா ஏன் தாக்கவேண்டும் என்பதற்கு டாக்டர் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். இஸ்லாம் கூறும் அரசியல் குறித்த முகப்புக் கட்டுரை சிறப்பு.

**- S. அஜித்தா, M. லைலாம்மா, S.மகுதனன், தேனி**

## சரியான அரசியல் பார்வை

ஐந்து மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள்ள சூழலில் சமரசம் சரியான அரசியல் பார்வையை முன்வைத்துள்ளது. இறைவனே தான் நாடியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கின்றான் என்ற கருத்து சிறப்பு. தேர்தல் காலத்தில் மக்கள் நலன் பேசிவாக்குறுதி தருபவர்கள் அதன்பிறகு காணாமல் போகிறார்கள். அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் போர் குறித்த விரிவான செய்தியை சமரசம் தந்துள்ளது. நேர்ச்சை சிறுகதையின் முடிவு சிறப்பு. ஏழைகளுக்கும், கல்விக்கும் பகிர்ந்தளிப்பது தான் உண்மையான நேர்ச்சை. இமாம் ஷாமில் புதிய தகவல். சாகித்ய அகாடமி விருது பெறும் தோழர் தமிழ்ச் செல்வனுக்கு வாழ்த்துகள்.

**- இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்**

## சாட்டையடி தலையங்கம்

ஒவ்வொரு வாக்காளனும் வாசித்துத் தெளிவு பெற வேண்டிய கட்டுரை இஸ்லாமும், அரசியலும். இந்தியாவின் பலம் பொருளாதாரத்தில் மட்டுமல்ல அதன் தார்மிகக் குரலிலும் என்பதை தலையங்கம் சவுக்கால் அடித்தாற்போன்று சொல்லியுள்ளது. பணிவும், அடக்கமும் அகிலம் போற்றும் பண்புகள் என்பதை வாழ்க்கைப் பாடம் எடுத்துரைத்துள்ளது. இனிய இளைஞர்களே கட்டுரை அருமை. தோழர் தமிழ்ச் செல்வனுக்கு வாழ்த்துகள்.

**- ப. குருசாமி, தேனி**


10 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களே !!
உங்களுக்கு 12 ஆம் வகுப்புடன் NEET / JEE தேர்வில் வெற்றி பெற வேண்டுமா...
JNA PUBLIC SCHOOL
(INTEGRATED RESIDENTIAL NEET/JEE PROGRAM IN AN ISLAMIC ENVIRONMENT)
AN INITIATIVE OF
JAL NEET ACADEMY
CREATING FUTURE MEDICOS
@ TIRUNELVELI
உங்களின் இறுதி இலக்கு NEET/JEE என்றால், தினசரி பள்ளி அழுத்தத்துடன் போராட வேண்டிய அவசியமில்லை..!
ஒரு ஆண்டை ஏன் வீணாக்க வேண்டும்,
அதை இழக்காமல் சாதிக்க முடியும்போது?
ADVANTAGES
• Single Focus on NEET/JEE Preparation
• No Clashes between School & Coaching
• Personalized Study Strategies
• Concept Based NCERT Learning
• More Time for Effective Study
• Stress-Free & Disciplined Study
• Reduced Economic Burden & Merit Scholarships
JALAL AHMAD (JAL)
Founder & CEO
மேலும் விபரங்களுக்கு...
8608 19 8608
ADMISSION CONTINUES...
JAL NEET ACADEMY
NEET REPEATERS 2027
1 YEAR LONGTERM NEET PROGRAM AFTER CLASS 12

சரம் : 46
மலர் : 22

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 துல்கஃதா 13-27 ● 2026 மே 1-15

# வெறுப்புக்குப் பலியாகாதீர்!

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கிலுள்ள டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்(TCS) இல் பணிபுரியும் குழுத் தலைவர்களான டேனிஷ் ஷேக், தௌசீஃப் அத்தர், ஷஃபி ஷேக், ஷாரூக் குரேஷி, ரசா மேமன், மேலாளர் அஸ்வினி சைனானி ஆகியோர் தங்களைப் பாலியல் துன்புறுத்தல் செய்ததுடன் கட்டாய மதமாற்றம், கட்டாய மத வழிபாட்டில் ஈடுபட வைத்ததாக ஓர் இளைஞரும் 7 பெண் ஊழியர்களும் காவல்துறையில் புகார் அளித்ததைத் தொடர்ந்து அனைவரும் கைது செய்யப் பட்டனர். காவல்துறை ஒன்பது வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் மற்றொரு அதிகாரியான அஸ்வினி சைனானி 14 நாள்களுக்கு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வைக் கண்டித்து நாசிக்கில் ரன்ராகினி ஜன் ஆக்ரோஷ் (Ranragini Jan Akrosh) என்ற பெயரில் இருசக்கர வாகனப் பேரணி நடைபெற்றது. பாஜக சட்டமன்ற உறுப்பினர் தேவயானி ஃபராண்டே இச்செயல்களைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.


வெளிநாட்டு பணப் புழக்கம், டெல்லி கார் குண்டுவெடிப்புடன் தொடர்பு, தீவிரவாதம், கட்டாய மதமாற்றம் என இச்செய்தி பல்வேறு கதைகளுடன் விஸ்வரூபம் எடுத்தது. லவ் ஜிஹாத், வெள்ள ஜிஹாத், எச்சில் ஜிஹாத் என்ற வெறுப்புப் புனைவுகளில் இந்தக் கதைக்கு கார்ப்பரேட் ஜிஹாத் எனப் பெயர் சூட்டப்பட்டு முஸ்லிம்களைக் குறித்த மிக மோசமான பரப்புரையை பாஜகவும், ஊடகங்களும் மேற்கொண்டன. டெலிகாலரான நிதா கான் HR தலைவர் எனவும் அவர் தலைமறைவாகி விட்டதாகவும் பொய்ச் செய்திகளைப் பரப்பினர். ஆனால் கர்ப்பிணியான நிதா அவர் வீட்டில்தான் இருக்கிறார்.

இக்குற்றச்சாட்டுகளை விசாரித்த சிறப்பு புலனாய்வுக் குழு(SIT) இக்குற்றச்சாட்டுகள் ஆதார மற்றவை எனக் கூறியுள்ளது. பாலியல் துன்புறுத்தல், கட்டாய மதமாற்றப் பின்னணி, வெளி நாட்டுத் தொடர்புகள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்று SIT தலைவர் சந்தீப் மிட்கே தெரிவித்துள்ளார்.

குழுத் தலைவருக்கும் புகாரளித்த பெண்ணுக்கும் இடையிலான காதல் விவகாரத்தை மற்ற விவகாரங்களுடன் இணைத்து இப்பிரச்னை திசை திருப்பப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளி வருகின்றன. பாலியல் துன்புறுத்தலை மதவிவகாரங்களுடன் ஏன் இணைத்துப் பேச வேண்டும்? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் தீஸ்தா செதல்வாட்.

இந்த வழக்குகளை நேரில் சென்று ஆய்வு செய்த Association for Protection of Civil Rights (APCR) ரமளான் நோன்பு வைப்பதிலிருந்து தொடங்கி பல்வேறு பொய்ப்பரப்புரைகளுக்கு இட்டுச் செல்லும் இந்தப் பிரச்னை குறித்த முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகச் சித்திரிக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பாஜகவும் ஊடகங்களும் பயன்படுத்தி வரும் சூழலில் நாசிக் விவகாரம் முஸ்லிம் களை வேலையற்றவர்களாக மாற்றுவதற்கும், படித்த முஸ்லிம் இளைஞர்கள் மீதான வெறுப்புப் பார்வையை வளர்ப்பதற்கும் கூர் தீட்டப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற ஆதாரமற்ற ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் உண்மை நிலையை வெளிப் படுத்துவதுடன், திட்டமிட்டு வெறுப்பை விதைப்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட வேண்டும். நாசிக் விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவதுடன் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். ஊடகச் செய்திகளை ஆராயாமல் நம்பி ஒரு சமுதாயத்தின் மீது வெறுப்பை வளர்த்துக் கொள்வதிலிருந்து ஒவ்வொருவரும் விலகியிருக்க வேண்டும். வெறுப்புக்கு நாம் ஒருபோதும் பலியாகிவிடக் கூடாது.




## தோற்கடிக்கப்பட்ட

# தொகுதி மறுவரையறை மசோதா - 2026

**- சேயன் இப்ராகிம்**

ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த தொகுதி மறுவரையறை மசோதா 2026 எதிர்க்கட்சிகளின் ஒன்றுபட்ட முயற்சி காரணமாகத் தோற்கடிக்கப் பட்டிருக்கிறது.

131ஆவது அரசியல் சாசன மசோதா என்ற பெயரில் நாடாளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50 விழுக்காடு அதிகரிக்கவும், அப்படி அதிகரிக்கப்பட்ட பிறகு பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக் கீட்டை நடைமுறைப்படுத்தவும் ஒன்றிய அரசு கொண்டு இந்த மசோதா நிறை வேற வேண்டுமனால் அவைக்கு வருகை தந்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். அப்படி மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைப் பெறாத காரணத்தால் பாஜக அரசு கொண்டு வந்த இந்த மசோதா நிறைவேறவில்லை. பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு நாடாளு மன்றத்தில் அவர் சந்தித்த முதல் தோல்வி இதுவே ஆகும்.

நாடாளுமன்றத்தில் ஆளும் பாஜக கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை இல்லை. எனவே இந்த மசோதா தோற்றுப் போனதில் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. மசோதா தோற்றுப் போன பிறகு பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தோற்கும் என்று தெரிந்தே இந்த மசோதாவைக் கொண்டு வந்தோம். இந்த மசோதாவைத் தோற்கடித்ததன் மூலம் எதிர்க்கட்சிகள் பெண்களின் இடஒதுக் கீட்டிற்கு எதிராக இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து விட்டனர் என்று குறிப்பிட்டார். பிரதமர் மோடியும் இதே பாணியில் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

முதன்முறையாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு இந்த மசோதாவுக்கு எதிராக வாக்களித்து தோற்கடித்துள்ளனர் என்பது ஆறுதல் தரும் செய்தியாகும். இந்த மசோதாவைக் கொண்டு வந்த பாஜக எப்படியாவது சில எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாக்குகளைக் கவர்ந்து அல்லது களவாடி அதனை வெற்றி பெறச் செய்ய முடியும் என நினைத்திருந்தது. அதன் எண்ணத்தில் தற்போது மண் விழுந்துள்ளது.

இந்த மசோதாவை அவசர அவசரமாக ஒன்றிய அரசு கொண்டு வருவதன் நோக்கம் என்ன? அதிலும் பெண்களுக்கான இடஒதுக்கீட்டையும் இதில் இணைத்துக் கொண்டு வர வேண்டிய அவசிய அவசரமென்ன?

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 543லிருந்து 815 ஆக உயர்த்த இந்த மசோதா வழிவகை செய்கிறது. அதாவது 50 விழுக்காடு உயர்வுக்கு இது வகை செய்கிறது. இதன்படி தமிழ்நாட்டின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண் ணிக்கை 39லிருந்து 59ஆக உயரும். உத்திரப்பிரதேச மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போதுள்ள 80 லிருந்து 120 ஆக உயரும். மேலோட்டமாகப் பார்த்தால் எல்லா மாநிலங்களுக்கும் தானே 50 விழுக்காடு உயர்கிறது. இதில் எதிர்ப்பதற்கு என்ன இருக்கிறது என்று கேட்கத் தோன்றும். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அப்படித்தான் கேட்கிறார். ஆனால் உண்மை நிலவரம் என்ன?

**தற்போது உபிக்கும் தமிழ்நாட்டிற்குமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசம் 41 (80-39=41). ஆனால் இந்த மசோதா நிறைவேறி இருந்தால் உ.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 120ஆக உயரும். அப்போது உபி மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்குமான உறுப்பினர்கள் எண்ணிக்கையின் வித்தியாசம் 61 ஆகி விடும்.**

தற்போது உபிக்கும் தமிழ்நாட்டிற்குமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசம் 41(80-39=41). ஆனால் இந்த மசோதா நிறைவேறி இருந்தால் உ.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 120ஆக உயரும். அப்போது உபி மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்குமான உறுப்பினர்கள் எண்ணிக்கையின் வித்தியாசம் 61 (120-59=61) ஆகி விடும். இந்தி மொழி பேசுகின்ற மாநிலங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே இந்த மசோதாவை பாஜக அரசு கொண்டு வந்தது. இந்த மசோதா நிறைவேறி இருந்தால், தென் மாநிலங்களின் உதவி இல்லாமலேயே ஒன்றிய அரசால் அனைத்துச் சட்டங்களையும் எளிதாக நிறைவேற்ற முடியும். சில புள்ளி விவரங்களைப் பார்ப்போம்.

1. உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், உத்தரகாண்ட், ஹரியானா ஆகிய மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய எண்ணிக்கை 207 ஆகும். இது மசோதா நிறைவேறியிருந்தால் அது 366 ஆகும். அதாவது உயர்வின் விழுக்காடு 77.

2 தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் தற்போதைய மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 132 ஆகும். மசோதா நிறைவேறியிருந்தால் 176 ஆக உயரும். உயர்வின் விழுக்காடு 33.



மசோதா நகலை எரிக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்

மேலும் 50 விழுக்காடு உயர்வு அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது. தற்போது ஒன்றிய அரசு தொடங்கியுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தவுடன் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் மறுசீரமைக்கப்படும். குடும்பக் கட்டுப்பாட்டைக் கடுமையாகக் கடைப்பிடித்து மக்கள் தொகையைக் குறைத்துள்ள மாநிலங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. அதன்படி, தமிழ் நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 47 ஆகக் குறையும். (அதாவது இந்த மசோதா நிறைவேறி தொகுதிகள் 59 ஆக உயர்த்தப்பட்டால்) மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் தீவிரம் காட்டாத வட மாநிலங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மேலும் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது என்பதற்கு மசோதாவில் எந்த உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தத் தொகுதி மறுசீரமைப்பு மசோதா பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டையும் இணைத்துக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தேவையற்றது. நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு மசோதா ஏற்கனவே செப்டம்பர் 2023இல் கொண்டுவரப்பட்டும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப்பின் அது நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தது. இந்த அறிவிப்பு தேவையற்றது என அப்போதே எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

உண்மையிலேயே பெண்களுக்கான இடஒதுக்கீட்டில் ஒன்றிய அரசுக்கு அக்கறை இருக்குமானால் இப்போதே அதனை நடைமுறைப்படுத்தலாமே? தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தாமல், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 543லேயே பெண்களுக்கான இடஒதுக்கீட்டை வழங்குவதில் என்ன பிரச்னை இருக்கிறது? எதிர்க்கட்சிகள் அதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லையே?

**இப்போதே அவையைக் கட்டுப்படுத்த முடியாமல் அவைத் தலைவர்கள் திணறுகின்றனர். பல உறுப்பினர்களுக்குப் பேசவோ, கேள்வி கேட்கவோ வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இந்நிலையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 815ஆக உயர்ந்தால் அவையைத் திறம்பட நடத்த முடியுமா?**

திமுக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் வில்சன் இது தொடர்பாக தனி நபர் மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்துள்ளார். எனவே தேவையில்லாமல் தொகுதி மறுசீரமைப்பையும் பெண்கள் இட ஒதுக்கீட்டையும் இணைத்து மசோதா தாக்கல் செய்தது ஒன்றிய அரசு. அதன் தீய நோக்கத்தைப் புரிந்து கொண்ட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மசோதாவைத் தோற்கடித்துள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 815ஆக அதிகரித்தால் ஏற்படும் சில பின்விளைவுகள் குறித்தும், அரசியல் விற்பன்னர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இப்போதே அவையைக் கட்டுப்படுத்த முடியாமல் அவைத் தலைவர்கள் திணறுகின்றனர். பல உறுப்பினர்களுக்குப் பேசவோ, கேள்வி கேட்கவோ வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இந்நிலையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 815ஆக உயர்ந்தால் அவையைத் திறம்பட நடத்த முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்புகின்றனர். எனவே அவையின் மாண்பு மேலும் குறைவதற்கே இது வழிக்கு வகுக்கும்.

தொகுதி மறுவரைப் பிரச்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காட்டிய உறுதிப்பாடு இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து மசோதாவை தோற்கடிக்கவும் வழி வகுத்தது.

இனி பாஜக என்ன செய்யும்? பொறுத்திருந்து பார்ப்போம்.



كلية الهداية للبنات
HIDAAYAH ISLAMIC COLLEGE FOR GIRLS * VELLORE *
ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி
R.N.பாளையம், வேலூர்
COURSE DETAILS
குர்ஆன், ஹதீஸ், ஒழுக்கம், நவீன பாடங்கள், திறன் சார்ந்தகல்வி, ஆளுமை மேம்பாடு, அனைத்தும் ஒருங்கே இணைந்த முழுமையான புதுமையான பாடத்திட்டம்
❖ அரபு மொழி
❖ குர்ஆன்
❖ தஜ்வீத்
❖ மனனம்
❖ குர்ஆனை அணுகும் முறை
❖ இஸ்லாமிய வரலாறு
❖ ஹதீஸ் பாடங்கள்
❖ பிக்ஹுச் சட்டங்கள்
❖ நபிமார்கள் வரலாறு
❖ ஒழுக்கப் பயிற்சி
ஹாஸ்டல் வசதி உண்டு
2026-2027 அட்மிஷன் நடைபெறுகிறது
அரசு சான்றிதழ் டிப்ளமோ படிப்புகள்
Vocational Institution of Open Schooling (NIOS)
1. Certificate in Computer Application
2. Fashion Designing
3. B.A. Islamic Studies
4. Mehandi Course
இத்துடன் +1, +2 அரசு அங்கீகாரம் பெற்ற பாடத்திட்டங்கள் திறமை மேம்பாட்டு வகுப்புகள் மற்றும் ஆளுமை மேம்பாட்டு வகுப்புகள்
கல்லூரியில் சேர்வதற்கான தகுதிகள்
◆ 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
◆ திருக்குர்ஆன் ஓதத் தெரிந்திருக்க வேண்டும்.
நெ.17, மதார் சாஹெப் தெரு, (வேலூர் இஸ்லாமிக் சென்டர் வளாகம்) R.N.பாளையம், வேலூர்-632001,
Cell:9843708538, 9789768220, 9344866444

*2026 ஜனவரி 12ஆம் நாள் நடைபெற்ற 49ஆம் சென்னை புத்தகக் காட்சியில் சமரசம் பொறுப்பாசிரியர் **வி.எஸ். முஹம்மத் அமீன்** அவர்கள் ஆற்றிய உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கிறது.*

# இன்னும் சொல்லப்படாத கதைகள்




அறிவு சுருங்கி வரக்கூடிய ஒரு காலத்தில் உணர்வு மேலெழுந்து மனிதன் சக மனிதனை அடித்துக் கொல்கின்ற, பகைத்துக் கொள்கின்ற ஒரு காலத்தில் அறிவை விரிவு செய்ய வேண்டிய, அறிவை விருத்தி செய்ய வேண்டிய, ஒரு வாசிப்புத் தலைமுறையை வார்த்தெடுக்க வேண்டிய ஒரு காலத் தேவை இன்றைக்கு இருக்கிறது. இந்த வாசிப்பை, அறிவை முன்னெடுத்துச் செல்வதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடியாக நிற்கிறது.

கதைகள் என்பது புத்தகங்களில் இருப்பது மட்டுமல்ல, இங்கே அமர்ந்திருக்கக்கூடிய உங்கள் ஒவ்வொருவரிடம் ஒரு கதை இருக்கிறது. உங்களிடம் கொஞ்ச நேரம் அமர்ந்து பேசினால் அந்தக் கதைகளை என்னால் எழுதில் வாங்கி விட முடியும். உங்கள் கனவைச் சொல்லுங்கள் என்று இன்றைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு திட்டத்தை முன்னெடுத்து இருக்கிறார். இலட்சக்கணக்கான குடும்பங்களின் கனவு என்னவாக இருக்கும்? அரசுடைய திட்டங்களைக் குறித்து அவர்கள் படிவம் தந்து இந்தப் படிவத்திற்கான கனவைக் கேட்கிறார்கள் என்றாலும் கூட ஒரு குழந்தையுடைய கனவு என்னவாக இருக்கிறது? ஒரு குடும்பத் தலைவனுடைய கனவு என்னவாக இருக்கிறது? அந்த வீட்டில் இருக்கக் கூடிய பணிப்பெண்ணுடைய கனவு என்னவாக இருக்கிறது? அங்கு இருக்கக்கூடிய ஒவ்வொருவருடைய கனவும் என்னவாக இருக்கிறது? அந்தக் கனவு நனவாகும்போது அது வாழ்க்கையாக மாறுகிறது. நனவிற்குச் சாத்தியமில்லாத பொழுதுகள் கதைகளாக மாறுகின்றன.

கதைகள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறது, கதை எழுதுவதும் பேசுவதும் சொல்லுவதும் மிகச்சிலரே! நாமெல்லாம் தாத்தா பாட்டியிடம் கதை கேட்டு வளர்ந்தவர்கள்தான். கதை சொல்லி கதை கேட்பதை மரபாகக் கொண்ட ஒரு வாழ்வை இன்றைக்கு மறந்து கதை கேட்பதற்கான குழந்தைகளும் இந்த உலகத்தில் இல்லை கதை சொல்வதற்கான பாட்டிகளும் இந்த உலகத்தில் இல்லை. உரையாடல் பொழுதுகளை நாம் தொலைத்து நிற்கின்றோம். பேசுவதற்கான காலப்பொழுதுகள் அருகிப் போன ஒரு காலகட்டத்தில், உரையாடலுக்கே இடமில்லாத இடத்தில் கதை எங்கிருந்து எழும் என்பதுதான் கேள்வி.

தொடரியிலே பயணம் செய்யும்போது அருகில் இருக்கக்கூடிய நண்பரிடம். ‘ஐயா எங்க போறீங்க? எந்த ஊர்?’ எனத் தொடங்கும் எளிமையான உரையாடல்கள் நம்மை எங்கே கொண்டு சேர்க்கும் தெரியுமா அருகில் இருக்கக் கூடியவர்கள் நம்முடைய வாழ்வின் நினைவுகளை மீட்டுத் தரக்கூடியவர்களாக மாறுவார்கள். அந்த உரையாடல் கதைப் பொழுதுகளாக கதைக் களங்களுக்கான கருவை நமக்குத் தந்து கொண்டிருக்கும்.

கதைகளை குழந்தைகளுடைய உலகோடு நாம் சுருக்கிக் கொள்கிறோம். உண்மையில் கதை எல்லாருக்குமானது. நாம் பேசும்போது ‘என்ன மாதிரி கதை விடுறான் பார்டா’ என்பார்கள். பேச்சிலிருந்து கதைகள் தொடங்குகின்றன.

பேசுவதை இலங்கைத் தமிழில் கதைப் பது என்று சொல்வார்கள். ஒருவருடைய பேச்சைக் கேட்பதற்கான காதுகள் உங்களிடம் இருக்க வேண்டும், அதை உள்வாங்கக்கூடிய மனது உங்களிடம் இருந்தால் நீங்கள் கதையை அவரிடமிருந்து எளிதில் பெற்றுக் கொள்ள முடியும். எனவே ஒவ்வொருவருக் குள்ளும் நூற்றுக்கணக்கான கதைகள் உறங்கிக் கிடக்கின்றன.

முன்பெல்லாம் கதை சொல்வதற்குக் களங்கள் இருந்தன. திண்ணைகள், சங் கங்கள், மரத்தடிகள், தேநீர் கடை பெஞ்சுகள் இருந்தன. ஆனால் இந்தக் களங்களையும் நாம் சிதைத்து விட்டோம். இன்றைக்கு திண் ணைகள் இல்லாத, மரத்தடிகள் இல்லாத காலம். கதைக் களங்களை நாம் தொலைத்து விட்டோம். நம்முடைய தாத்தா பாட்டிகள் ஒரு வாழ்வியலை நமக்குள் கதை வழியாகக் கடத்திக் கொண்டே இருப்பார்கள். அந்தக் கதையில் அறங்களை அவர்கள் பேசுவார்கள், அந்தக் கதையின் வழியாக வாழ்வியல் ஒழுக்கங்களை அவர்கள் கற்றுத் தருவார்கள். நம்மு டைய எதிர்காலம் எப்படிக் கட்ட மைக்கப்பட வேண்டும் என்ற பாட்டி யின் பெருவிருப்பும் அந்தக் கதைக்குள் ஒரு கருவாக அமைந்திருக்கும்.

அந்தக் கதைகள் எல்லாம் தாத்தா பாட்டியினுடைய கதைகளாகவும் இருக் கும். வீட்டில் ஏற்படுகின்ற வலிகளை, ஆற்றாமைகளை, இயலாமைகளை, அவள் கதை வடிவாக மாற்றிச் சொல்லும் போது இளைப்பாறுதல் அடைகிறாள். ஆறுதல் அடைகிறாள். இன்றைக்குக் கதை மரபு தொலையும் போது தனக்குள் அவள் தன்னைப் புதைத்துக் கொண்டு செத்துப் போகிறாள். அந்தக் கதையில் இருக்கக் கூடிய அந்த மாந்தர்கள் யார் என்று சொன் னால் அந்தப் பாட்டிதான் அந்த கதையுடைய நாயகியாக இருப்பார். தன்னுடைய கதை யைத்தான் தன்னுடைய பேரக் குழந்தை களுக்கு வேறொரு வடிவிலே அவள் சொல் லிக் கொண்டே இருப்பாள்.

கதை கேட்கின்ற பிள்ளைகளும் கதை நாயகர்களாகத் தங்களைக் கற்பிதம் செய்து கொள்வார்கள். இளம்பருவத்தில் அப் படித்தான் நாம் நாயகர்களாக நம்மைச் செதுக்கிக் கொண்டோம். இந்தக் கதை உலகின் வழியாக நம்மோடு அந்த நிலவு நடப்பது என்னுடன் மட்டும்தான் என்ற அந்த பிரமிப்பு எல்லாக் குழந்தைகளையும் போல எனக்கும் இருந்தது. நமக்கு ஒரு விசித்திரம் இருக்கிறது என்னோடு நிலவு நடக்கிறது என்ற அந்த இளவயது ஈர்ப்பு அந்தக் கதைக்குள் நாமும் மாந்தர்களாக மாறக்கூடிய ஒரு சூழலை எழுப் பிக் கொண்டே இருக்கிறது.

திருக்குர்ஆன் உலகப் பொதுமறை, அது உலக மொழி பேசுகிறது. அது மதநூல் மட்டுமல்ல வாழ்வியல் நூல் என்ற அடிப்படை யிலே திருக்குர்ஆன் கதை சொல்கிறது. திருக் குர்ஆனில் பிரம்மாண்டமான கதை




ஒன்று இருக்கிறது. ஆனால் அது கதை அல்ல ஒரு வாழ்வியல் நெறியை கதை சொல்லலின் வழியாகப் போதிக்கிறது. திருக் குர்ஆனின் ஓர் அத்தியாயத்திற்குக் குகை வாசிகள் என்று பெயர். அந்த அத்தியாயம் ஓர் அழகிய சித்திரத்தை நம் கண் முன்னால் கட்டி எழுப்புகிறது. ஒரு மன்னனுடைய கொடுமை தாங்காமல் அதிலிருந்து தப்பிப்பதற்காக சில இளைஞர்கள் தங்களுடைய அறத்தை, வாழ்வில் நெறியை, மதம் சார்ந்த நம்பிக்கை யைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இடம் பெயர்கிறார்கள்.

அவர்கள் ஒரு குகையிலே தஞ்சம் அடைகிறார்கள். இதைக் கொஞ்சம் நீங்கள் காட்சிப்படுத்திப் பாருங்கள். குகையில் தஞ்சம் அடையக்கூடியவர்கள் நீண்ட நெடிய உறக்கத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். 300 ஆண்டுகள் அல்லது 309 ஆண்டுகள் அவர்கள் உறங்குவதாகத் திருமறை பதிவு செய்கிறது. 300 ஆண்டுகள் அவர்கள் உறங்கி முடிந்ததும் எழுந்து வெளியே வருவதற்குள் உலகம் மாறிவிடுகிறது. இந்த உலகத்தின் வெளிச்சம் மாறிவிடுகிறது, நிறம் மாறிவிடுகிறது, இங்குள்ள உடை உணவு எல்லாம் மாறிவிடுகின்ற போது அவர்களுடைய உலகம் வேறொன்றாக இருக்கிறது. அவர்கள் கொண்டு வருகின்ற நாணயம் செல்லாத காசாக மாறுகிறது. அவர்களுடைய தோற்றமும் அவர்களுடைய உடையும் அந்தக் காலத்திலிருந்து பின்னோக்கிச் சென்ற ஒரு காலத்தினுடைய தோற்றமாந்தர்களாக அவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்கள் பேசுகின்ற மொழி அன்றைக்கு வழக்கொழிந்து இருக்கிறது. செல்லாத காசை வைத்துக் கொண்டு பொருந்தாத உடையிலே தங்கள் வாழ்க்கைக்குச் சற்றும் பொருத்தமில்லாத உலகிலே அவர்கள் வெளிப்படுகின்ற அந்தக் காட்சியை, திருமறைக் குர்ஆனின் சூரத்துல் கஹ்ப் ஒரு கதையாகச் சொல்லித் தருகிறது.

> **திருக்குர்ஆனில் பிரம்மாண்டமான கதை ஒன்று இருக்கிறது. ஆனால் அது கதை அல்ல ஒரு வாழ்வியல் நெறியை கதை சொல்லலின் வழியாகப் போதிக்கிறது. திருக்குர்ஆனின் ஓர் அத்தியாயத்திற்கு குகை வாசிகள் என்று பெயர். அந்த அத்தியாயம் ஓர் அழகிய சித்திரத்தை நம் கண் முன்னால் கட்டி எழுப்புகிறது.**

நபிமார்களைக் குறித்துப் பேசுகின்ற குர்ஆனிலே யூசுஃப் என்ற ஓர் இறைத்தூதருடைய வரலாற்றை மிக நேர்த்தியாக அழகாக ஒரு கதை வடிவிலே அது வடித்துத் தருகிறது. யூசுஃப் அவர்களுடைய வரலாற்றிலே அவருடைய இளமைப் பருவத்தைக் குறித்த வர்ணனைகள், அவருடைய சகோதரர்கள் அவர் மீது கொள்கின்ற பொறாமை, தந்தையிடமிருந்து யூசுஃபை அவர்கள் நயவஞ்சமாக அழைத்துச் செல்வது, யூசுஃபைக் கிணற்றில் தூக்கி வீசுவது, வணிகக் கூட்டம் யூசுஃபைக் கிணற்றிலிருந்து மீட்டு எடுத்துச் செல்வது, எகிப்திலே மன்னர் யூசுஃபை வாங்கி வளர்ப்பது, அங்குள்ள அரசி யூசுஃப் மீது பெருங்காதல் கொண்டு அவர் மீது குற்றப்பழி சுமத்துவது, அந்தக் குற்றப்பழியில் அவர் சிறையில் அடைக்கப்படுகின்ற காட்சி, சிறைத் தோழருடனான அவருடைய உரையாடல், விவாதம் அவருடைய அறிவுக் களம், கனவுக்கான விளக்கம், அந்தச் சிறையிலிருந்து அவர் மீண்டு வருவது, மன்னர் அரண்மனையிலே யூசுஃப் அமைச்சராக முக்கியப் பதவி வகிப்பது, அங்கே பஞ்சகாலம் ஏற்படுவது, அந்த பஞ்சகாலத்திற்கான தீர்வு, தந்தையுடன் மீண்டும் இணைவது என்பதைக் குர்ஆன் பேசுகிறது என்று சொன்னால், இந்தக் கதைக்கான இடத்தை, இறைவன் தருகின்ற இடம் என்ன என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்.

மிக முக்கியமாக திருக்குர்ஆனின் ஒரு வசனம் அகிலனின் பாவை விளக்கு நாயகனுக்கு வெளிச்சம் தருகிறது தணிகாசலம் என்ற அந்தப் பாத்திரம் தன்னுடைய மிக நெருக்கடியான மன உளைச்சாலான சூழலில், நிம்மதி தேடி அலையக்கூடிய ஒரு நீண்ட நெடிய பயணத்திலே தணிகாசலம் நண்பர்களுடன் சுற்றுலாச் செல்கிறார். தாஜ்மஹாலில் எழுதப்பட்ட ‘இறைவன் சக்திக்கு மீதி எந்த ஒரு ஆத்மாவையும் அவன் சோதிப்பதில்லை’ என்ற திருக்குர்ஆனின் வசனத்திலிருந்து தம் வாழ்க்கையை மீட்டுக் கொண்டு நம்பிக்கையைப் பெற்றுத் திரும்புவதாக அகிலனின் பாவை விளக்கு சொல்கிறது.

நம்பிக்கையைத் தருகின்ற கதைகள் இன்று இல்லை. இன்றைக்குப் பல கதைகள் வெறுப்பின் கதைகளாக மாறிவிட்டன.

ஒருவரை ஒருவர் புரியாமல் ஒருவரை ஒருவர் அறியாமல் இருந்தால் அங்கே வெறுப்பு பிறக்கிறது. எனவே வெறுப்பின் கதைகளை இல்லாமலாக்க வேண்டுமென்றால் அன்பின் கதைகளைப் பேச வேண்டும். இந்த மண் எல்லோருக்குமான மண். உலக அரங்கில் எந்த நாட்டிற்கும் இல்லாத சிறப்பு இந்தியாவிற்கு இருக்கிறது. இங்கே மொழி கடந்து, இனம் கடந்து, மதம் கடந்து, அண்ணன் தம்பிகளாக, மாமன் மச்சான்களாக வாழ்கிறோம். இந்த உறவும் வாழ்க்கைப் பாடும் நம்முடைய கதைகளாக காவியங்களாக இலக்கியங்களாக வெளிவருவதிலே தடை ஏற்படுமானால், வெறுப்பின் கதைகள் உருவாகி அது இதயங்களைப் பிளந்து விடும்.

கவிஞர் கலாப்ரியா தி இந்து நாளிதழில் பாற்கடல் தொடர் எழுதி வருகிறார். நான் கடையநல்லூரைச் சார்ந்தவன். அந்த வாழ்வியல் எங்களுக்குள் நெருக்கத்தைத் தருகிறது. வண்ணதாசன் கதைகளும், கல்யாண்ஜி கவிதைகளும் திருநெல்வேலி மண் சார்ந்து எங்களை நெருக்கமாக வைத்துக் கொள்கிறது. எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களிடம் என் அனுபவங்களைப் பேசும்போது அது அழகான நிகழ்வாக, செய்தியாக மாறி விடுகிறது. அப்படியான ஒரு கதைதான் அபூ இப்ராஹீமின் கதை.

நான் வெளிநாட்டிற்குப் போகக்கூடாது என்பதிலே உறுதியாக இருந்தேன். இந்த மண்ணை விட்டுச் சென்று விடக்கூடாது, என்னுடைய உழைப்பும் என்னுடைய ஆற்றலும் இந்த மண்ணுக்குத்தான் சேர வேண்டும் என்பதிலே உறுதியாக இருந்தேன். கால நெருக்கடி என்னை வெளித்தள்ளும் போது வெளிநாட்டில் வேலைவாய்ப்பில் எனக்கு ஒரே ஓர் செய்தி என் விருப்பத்தை நெருக்கமாக்கியது. 'புத்தகக் கடையில் வேலை' என்றதும் சட்டெனக் கிளம்பி விட்டேன். வாசிப்பதற்கான ஒரு வாய்ப்பு அங்கே கிடைக்கும் என்பதால் புத்தகம் படிப்பதற்காகப் பயணம் சென்றேன்.

எங்கள் கடைக்கு அபூ இப்ராஹீம் என்ற ஒரு முதியவர் வருவார். அவர் கையில் ஒரு கைத்தடி வைத்திருப்பார். ஆனால் அவர் கைத்தடி ஊன்றுவதற்குத் தேவையில்லை. அவர் ராஜ நடையில் வருவார். வாயில் சுயிங்கம் மென்று கொண்டிருப்பார். தடித்த கனமான கண்ணாடி போட்டுக் கொண்டு வரக் கூடிய அபூ இப்ராஹீம் எங்கள் கடையில் அடுக்கி வைத்திருக்கக்கூடிய புத்தக அலமாரியில் தன்னுடைய கைத்தடியால் தட்டுவார். இந்தப் புத்தகத்தில் பத்து எடு இதில் ஒரு அஞ்சு எடு என்பார். நிறையப் புத்தகங்களை வாங்கிச் செல்வார்.

எனக்கு ஒரு ஐயம் வந்தது. ஒருநாள் நான் அவரிடம் 'நீங்கள் புத்தகக் கடை வைத்திருக்கிறீர்களா?' என்று கேட்டேன் 'இல்லை' என்றார். 'நீங்கள் புத்தகம் விற்பனை செய்கிறீர்களா?' என்றேன். 'இல்லை நான் புத்தகம் விற்பனை செய்யவும் இல்லை' என்றார். 'பின் எதற்காக இந்தப் புத்தகங்களை நீங்கள் வாங்கிச் செல்கின்றீர்கள்?' என வினவினேன். 'என் வீட்டிற்கு யார் வந்தாலும் நான் தேநீர் தருகிறேனோ இல்லையோ என் வீட்டிற்கு வந்தால் புத்தகம் இல்லாமல் யாரும் வெளியே செல்ல முடியாது' என்று சொன்னார். எனவே அபூ இப்ராஹீமைப் பார்ப்பதற்காக வாசிக்கின்ற மக்கள் சென்றார்கள். அவர் வீட்டுக்குப் போனால் புத்தகம் கிடைக்கும் என்பதால் வாசக நண்பர்கள் வருகை அதிகமானது. ஓர் அறிவுச் சமுதாயத்தை அங்கே அபூ இப்ராஹீம் உருவாக்கினார்.

ஒரு நாள் அபூ இப்ராஹீம் வரவில்லை, அவருடைய மகன் வந்தார். ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைக் கேட்டு இந்தப் புத்தகத்திலே 100 பிரதிகள் வேண்டும் என்று சொன்னார். 'ஏன் அபூ இப்ராஹீம் வரவில்லை ஏன் இந்த 100 பிரதிகள்?' என்று கேட்டபோது, 'என்னுடைய தந்தை உடல் நலம் இல்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர் யாரையும் பார்க்க முடியாது. 'நான் உங்களுடன் பேசும் நிலையில் இல்லை. இந்தப் புத்தகங்கள் உங்களுடன் பேசும். என்னைச் சந்திக்க வந்ததற்கு நன்றி'

என்று அந்தப் புத்தகத்தில் எழுதி, பார்க்க வந்த எல்லோருக்கும் இந்தப் புத்தகத்தைக் கொடுங்கள்' என்று சொன்னார்.

இதைச் சொல்லி ஒரு சில நாள்கள் கூட இல்லை. அபூ இப்ராஹீமின் மகன் வேகமாக வந்து 1000 புத்தகங்கள் வேண்டும் என்றார். 'என்ன என்று கேட்டபோது, 'என் தந்தை அபூ இப்ராஹீம் இறந்துவிட்டார். அவருடைய இறுதி ஊர்வலத்துக்கு வரக்கூடிய எல்லார் கைகளிலும் இந்தப் புத்தகத்தைக் கொடுக்கச் சொன்னார்' இந்தப் புத்தகக் காதலை எனக்குள் வைத்தால் அது சொல்லப்படாத கதையாகவே இருந்திருக்கும். எழுத்தாளர் எஸ்.ரா அவர்கள் தன்னுடைய வீடில்லா புத்தகங்கள் தொடரில் இச்செய்தியைப் பதிவு செய்தார்.

இப்படி உலகம் முழுவதும் புத்தகம் வாசிக்க கூடியவர்கள் இருக்கிறார்கள். கதையைக் கட்டி எழுப்பக் கூடியவர்கள் இருக்கிறார்கள். நாம் எங்காவது செல்லத் தாமதமானால் உடனே ஒரு கதை சொல்வோம். நியாயப்படுத்துவதற்காக நாம் சொல்கின்ற கதைகள் ஒவ்வொருவருக்குள்ளும் உறங்கிக் கிடக்கின்றன.

வெனிஸ் திரைப்பட விழாவில் இரண்டாம் இடம் பிடித்து சில்வர் லயன் கிராண்ட் ஜூரி விருதைப் பெறுகிறது ஒரு படம். அதை இயக்கியவர் பிரஞ்ச் துனிசிய இயக்குநர் கவுசர் பென் ஹானியா. தி வாய்ஸ் ஆஃப் ரஜப் ஹிந்த் என்ற அந்தத் திரைப்படத்தைத் திரையிட்டு முடித்ததும் 23 நிமிடங்கள் அங்குள்ள பார்வையாளர்கள் எழுந்து கை தட்டினார்கள். அது ஃபலஸ்தீனக் குழந்தையின் கதை. அங்குள்ள குழந்தைகளின் கதைகள் துயரமானவை. நெஞ்சடைக்கக் கூடியவை. அந்த ஃபலஸ்தீனக் குழந்தை ரஜப் ஹிந்த் போன்று இன்னும் சொல்லப்படாத கதைகள் ஏராளமாக இருக்கின்றன.

**நம்பிக்கையைத் தருகின்ற கதைகள் இன்று இல்லை. இன்றைக்குப் பல கதைகள் வெறுப்பின் கதைகளாக மாறி விட்டன. ஒருவரை ஒருவர் புரியாமல் ஒருவரை ஒருவர் அறியாமல் இருந்தால் அங்கே வெறுப்பு பிறக்கிறது. எனவே வெறுப்பின் கதைகளை இல்லாமலாக்க வேண்டுமென்றால் அன்பின் கதைகளைப் பேச வேண்டும்.**

ரஜப் ஹிந்த் தன்னுடைய குடும்பத்துடன் செல்கிறார். ஃபலஸ்தீனக் குழந்தைகளைக் கொல்கின்ற ஒரு கொடூரத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிற இஸ்ரேல் ரஜப் ஹிந்தின் குடும்பத்தை அழிக்கின்றது. ரஜப் ஹிந்த் மட்டும் தப்புகிறார். ரெட் கிராஸைச் சார்ந்தவர்கள் அந்தக் குழந்தையைத் தொடர்பு கொண்டு பேசுகின்ற உரையாடல்தான் அந்தப் படம்.

ரஜப் ஹிந்திடம், 'செல்லமே.. நான் பேசுறது கேட்குதா?' என்று சகோதரி தொலைக் கருவியில் வினவ 'கேக்குது..' என்கிறாள் ரஜப்.

'பயப்படாத.. நாங்க இருக்கோம்',

'இல்ல.. எனக்குப் பயமா இருக்கு!'

'பக்கத்துல யாரு இருக்கா?'

'அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி எல்லாரும் இருக்காங்க.. ஆனா அவங்க யாருமே உயிரோட இல்ல.. எனக்குப் பயமா இருக்கு!'

'நீ பயப்படாத உன்னைக் காப்பாற்றி விடுகிறோம்' கொலைகார கொடிய மிருகமான இஸ்ரேலிய இராணுவம் ரஜப் இருக்கும் வாகனத்தை நெருங்குகிறது.

'அவர்கள் என்னை நெருங்கிவிட்டார்கள்'

'எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்கள்?'

'அவர்கள் நிழல் என் மீது விழுகிறது. எனக்கு பதற்றமாக இருக்கிறது'

'பயப்படாதே இறைவன் நம்மோடு இருக்கிறான்'.

'என்னைக் காப்பாற்றி விடுவீர்களா?' பதிலின்றி ரெட் கிராஸைச் சேர்ந்த சகோதரி அழுகிறாள்.

'தொலைப்பேசியைத் துண்டித்து விடாதீர்கள்' என்ற ஒற்றைக் கோரிக்கையை

வைக்கிறாள் ரஜப். அவள் இந்த உலகத்திற்கு வைத்த வேண்டுகோள். 'இறுதிவரை எங்களோடு நீங்கள் இருப்பீர்களா?' இது ஃபலஸ்தீனின் குரல். ஆனால் சற்று நேரத்தில் அந்தக் குழந்தையிடமிருந்து எதுவும் இல்லை. நிசப்தம். ரஜப் ஹிந்த் என்ற அந்த அழகிய குழந்தையையும் கொன்று விடுகிறார்கள்.

இப்படி ஏராளமான வலி மிகுந்த சொல்லப்படாத கதைகள் ஃபலஸ்தீன மண்ணிலே புதைந்து கிடக்கின்றன. அப்படியான மற்றொரு கதைதான் ரஸாவின் கதை. ரஸா என்ற 10 வயதுக் குழந்தை கதை அல்ல உயில் எழுதுகிறாள். அங்குள்ள ஒவ்வொரு குழந்தைகளும் உயில் எழுதி வைத்துவிட்டுச் சாகிறார்கள். ரஸா எழுதுகிறாள். 'என்னை அவர்கள் எந்த நேரமும் கொல்லலாம். நான் இறந்துவிட்டால் என்னுடைய பொருள்களை ரஹப், ஷாரா, ஜூடி, பதூல், லானாவிற்குப் பங்குவைத்துக் கொடுங்கள்.

என்னுடைய மாதாந்திரத் தொகை 50 செகல்களில் 25ஐ ரஹபிற்கும் 25ஐ அஹமதுவுக்கும் கொடுத்து விடுங்கள். என் தம்பி அஹமது கொஞ்சம் சேட்டை செய்யக் கூடியவன். அவனை நீங்கள் பொருந்திக் கொள்ளுங்கள். என்னுடைய விளையாட்டுச் சாமான்களை நீங்கள் பதூலுக்குக் கொடுங்கள்' என்று சொல்லிவிட்டு அவள் இறுதியாகச் சொன்னதுதான் வாசிப்பிற்கான நம்பிக் கைச் செய்தி.

அந்தப் போர்க்களச் சூழலிலும், கல்வி நிலையங்கள் முற்றிலும் அழிக்கப்பட்ட அந்த பூமியிலே, வாழ்வாதாரம் முழுமையாகச் சிதைக்கப்பட்ட அந்த பூமியிலே, ஒரு ரொட்டித்துண்டுக்கு வழியில்லாத, தண்ணீருக்கு வழியில்லாத அந்த காஸாவிலே நித்தமும் வெடிகுண்டுகளும், உயிர்ப் பலிகளும் நிகழ்கின்ற சூழலில் ரஸா எழுதுகிறாள் 'என்னுடைய கதைப் புத்தகங்களை நீங்கள் ரஹபிற்குக் கொடுங்கள் என்று!' உலகம் முழுவதும் கதைக்கான இடம் இருந்தாலும் போர்க்களப் பூமியில் நிர்மூலமாக்கப்பட்ட காஸாவின் இடிபாடுகளுக்கிடையில் கதைக்கான இடம் இருக்கிறது என்பதுதான் வாசிப்பின் பெருமதியை, அழுத்தத்தை நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்படாத கதைகள் இந்த மண்ணில் ஏராளம் ஏராளம் உண்டு. இஸ்லாமியர்களுடைய வாழ்க்கை இன்றைக்கு வேறொன்றாக சித்திரிக்கப்பட்டு தீவிரவாதிகளாகவும், பயங்கரவாதிகளாகவும், பெண்ணடிமைவாதிகளாகவும் இங்கே சொல்லப்படுகின்ற அந்தக் கதைகள் வேறொன்றாக இருக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல. மாமன் மச்சானாக அண்ணன் தம்பிகளாக நெஞ்சுக்கு நெருக்கமாக நாம் பழகிக் கொண்டிருக்கின்ற இந்த பூமியிலே நீங்கள் அறிகின்ற பார்க்கின்ற மனிதர்கள் தான் கதை மாந்தர்கள். எங்கிருந்தோ அவர்கள் சொல்கின்ற செய்திகளை நீங்கள் நம்பி விடாதீர்கள். படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள் பழகிப் பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள்.

நூறாண்டு கால தமிழ்ச் சினிமாவிலே முஸ்லிம்களைக் குறித்து சரியான பதிவுகள் இல்லாத இந்தக் காலத்தில் அது குறித்துப்பேசுவதற்கும், உண்மையான வாழ்வியலைப் பதிவு செய்வதற்கும் தமிழின் ஆகச் சிறந்த இயக்குநர்களில் ஒருவரான என் அன்பு நண்பர் இயக்குநர் மீரா கதிரவன் முன் வந்திருக்கின்றார். இதுவரை பதிவு செய்யப்படாத 'இஸ்லாமியர்களுடைய பெரு வாழ்வை பெருங்காதலை ஹபீபி என்ற திரைப்படத்தின் மூலமாக முதல் முதலாகப் பதிவு செய்து உள்ளார். விரைவில் ஹபீபி திரைக்கு வர இருக்கும் மகிழ்வான செய்தியைச் சொல்லி இன்னும் இது போன்ற சொல்லப்படாத கதைகளை நாம் சொல்ல வேண்டும். நம் கதைகளை நாம்தான் பேச வேண்டும். உங்கள் கதைகளை நீங்கள் பேச வேண்டும். உங்கள் கதைகளை நீங்கள் பேசுங்கள் அந்தக் கதைகள் வரலாறாக மாறும். உரையாடுவோம். உறவாடுவோம். நம் கதைகளை நாம் எழுதுவோம்.



# வெறுப்புப் பட்டியலைக் குறைப்போம்

- அப்பாஸ் அல் ஆசாதி

நம் மனதில் வெறுப்புகளின் பட்டியல் மிக நீளமாக இருக்கக் கூடாது. அதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். அதில் தேவையில்லாமல் சேர்க்கப்பட்ட பெயர்களை, காலம் கடந்த வலிகளை, பயனற்ற கோபங்களை மெதுவாகக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.

நம் ஒவ்வொருவருக்கும் நமக்குப் பிடிக்காதவர்கள் என்றொரு பட்டியல் மனதுக்குள் இருப்பது இயல்பு. அதுபோல கெட்டவர்கள் என்ற இன்னொரு பட்டியலும் நம்மால் உருவாக்கப்படுகிறது. ஆனால் இவ்விரண்டும் ஒன்றுதானா?

ஒரு கணம் நின்று சிந்திக்க வேண்டிய கேள்வி இதுதான். நமக்குப் பிடிக்காதவர்கள் என்ற பட்டியலில் இருப்பவர்கள் அனைவரும் உண்மையில் கெட்டவர்களா? அல்லது நமக்கு ஏற்பட்ட சில தனிப்பட்ட அனுபவங்களின் காரணமாகவே அவர்களை நாம் அப்படிச் சித்திரித்துக் கொண்டிருக்கிறோமா?

ஒரு மனிதன் உண்மையிலேயே தீமை செய்தவன்; அவன் திருந்த விருப்பமில்லாதவன்; அவன் அநியாயத்தையே தன் வழியாகக் கொண்டவன் என்றால், அவனை நம்மால் நேசிக்க முடியாமல் போவதில் பெரிய குற்றமில்லை. ஆனால் ஒரே ஒரு நிகழ்வு, ஒரே ஒரு சொல்லால், ஒரே ஒரு தவறால், சிலரை வாழ்க்கை முழுவதும் வெறுப்புப் பட்டியலில் அடைத்து வைத்திருக்கிறோமே. அது நியாயமா? எவ்வளவு காலம் நாம் அந்தப் பட்டியலை அப்படியே வைத்திருக்கப் போகிறோம்?

இறைவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அப்படியானால், மனிதர்களை மன்னிக்கும் மனப்பக்குவம் நமக்கும் இருக்க வேண்டாமா? நம் மனதில் வெறுப்புகளின் பட்டியல் மிக நீளமாக இருக்கக் கூடாது. அதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். அதில் தேவையில்லாமல் சேர்க்கப்பட்ட பெயர்களை, காலம் கடந்த வலிகளை, பயனற்ற கோபங்களை மெதுவாகக் குறைக்க முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்தால், நமக்குப் பிடிக்காதவர்கள் என்ற பட்டியல், இன்றைய எண்ணிக்கையை விட நாளை கொஞ்சமாவது குறையலாம்.

மனிதனின் இயல்பான பலவீனங்களில் ஒன்று தவறு செய்வது. அந்தத் தவறுகளுக்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கலாம்.

**மனதில் அதிகமான கோபங்களும் வெறுப்புகளும் இருக்கும் போது, இரவில் உறங்கும்போது கூட மனம் லேசாக இருக்காது. அது கனத்த நினைவுகளோடும், சுமையான உணர்வுகளோடும் தான் படுக்கைக்குச் செல்லும்.**

ஒருவன் இன்னொருவனுக்கு மனவலியை ஏற்படுத்தும் அளவுக்கு நடந்து கொண்டதற்குப் பின்னாலும், அவனுக்கே தெரிந்த சுமைகள், அழுத்தங்கள், குழப்பங்கள் இருக்கலாம்.

பாதிக்கப்பட்ட நபராக நாம் இருக்கும் போது, நமக்கு ஏற்பட்ட வலி நிச்சயமாக வேதனையைத் தரும். காலம் மாறினாலும் அந்த வலியின் சுவடுகள் மனதில் மிச்சமிருக்கும்.

ஆனால் அதே நேரத்தில் அந்த வலியை ஏற்படுத்திய மனிதன், பின் நாள்களில் அதற்காக மனம் வருந்தியிருக்கக்கூடும். அவனுக்கு உரிய அறிவில்லாத நிலையில் அது நடந்திருக்கலாம். அல்லது அவன் தன்னுடைய குறைகளைச் சுமந்து கொண்டிருந்த ஒருவனாக இருந்திருக்கலாம். அவன் அப்படியிருந்தாலும் நாம் அப்படி இருக்க வேண்டுமா?

இறைவன் நம் மீது திருப்தி கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் வாழ விரும்பும் நாம், மனிதர்களோடு முகம் மலர்ந்து, நேசமிக்க உணர்வோடு, நல்ல உறவுகளைப் புதுப்பிப்பதற்கான வழிகளை யோசிப்பது நலமாக இருக்குமல்லவா? மனதில் அதிகமான கோபங்களும் வெறுப்புகளும் இருக்கும் போது, இரவில் உறங்கும் போது கூட மனம் லேசாக இருக்காது. அது கனத்த நினைவுகளோடும், சுமையான உணர்வுகளோடும் தான் படுக்கைக்குச் செல்லும்.

ஆனால் எவர் மீதும் குரோதமில்லாமல், எல்லோருக்கும் நன்மையை நினைக்கும் மனம் எவ்வளவு லேசானது! அது விழித்திருக்கும் போதும் உறங்கும் போதும் மென்மையானது. இலவம்பஞ்சு போல, காற்றில் எளிதாய் மிதக்கும் மனம் அது. அதில் பாரம் இல்லை, பளு இல்லை, வெறுப்பின் எடை இல்லை. நம் மனதும் அப்படி இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்?

இன்றைய காலத்தில் மரணச் செய்திகளை நாம் அடிக்கடி காண்கிறோம். ஒருகாலத்தில் வயதானவர்கள் மட்டுமே மரணிப்பார்கள் என்ற எண்ணம் இருந்தது. இப்போது அந்த வரம்புகள் எல்லாம் இல்லாமல் போய் விட்டன. நம்மை விட வயதில் குறைந்தவர்களும் மரணத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாமும் ஒருநாள் மரணத்தைச் சந்திக்கத் தான் போகிறோம். அப்படியானால், நாம் என்ன செய்ய வேண்டும்? வெறுப்புப் பட்டியலைப் பெருக்காமல், நேசத்திற்குரியவர்களின் பட்டியலை அதிகரிக்க வேண்டும்.

எல்லோருடனும் நலத்தையும், நல்ல தொடர்பையும், நல்ல நட்பையும் புதுப்பிக்க முயற்சிக்க வேண்டும். ‘என்னுடைய இறைவா! நான் உன்னுடைய படைப்புகளான மனிதர்களோடு, உனது திருப்தியை நாடி, நல்ல உறவுகளையே பேணி வந்தேன். மேலும் உன்னுடைய திருப்தியை நாடி நான் மனிதர்களை மன்னித்தேன். அதற்காக என் மீது உன் அருளையும் கருணையையும், இம்மையிலும் மறுமையிலும் பொழியச் செய்’ என்ற பிரார்த்தனையை உளமார்ந்து இறைவன் முன் வைக்கத் தகுதியான மனிதர்களாக நாம் மாற வேண்டும்.

மனிதர்களுடன் உறவைப் புதுப்பிப்போம். எங்காவது கசப்பு, குறை, வலி இருந்தால் அதற்கு நாமே மருந்து பூசி, மனதைச் சீர்செய்து, மன்னிப்பைத் தேர்வு செய்து, நலமாகத் தொடரும் எண்ணத்துடன் வாழ்க்கையை முன்னெடுப்போம். மன்னிப்பு என்பது பலவீனம் அல்ல. அது மனத்தின் உயரமும், இறைவன் நம் மீது கொள்ளும் திருப்திக்கான வாசலும் அல்லவா..!

அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

# வாசிப்பை நேசிப்போம்!

இன்றைய தொழில்நுட்ப உலகில் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்றது. மனிதனின் அறிவுப்பசிக்கும், பொழுதுபோக்கிற்கும், மன அமைதிக்கும் உற்ற துணையாக இருந்த புத்தகங்கள், இன்று திறக்கப்படாத பொக்கிஷங்களாக மாறிவருகின்றன.

இன்று வாசிப்புப் பழக்கம் எல்லா மட்டங்களிலும் பொதுவாகவும் இளம் தலைமுறை யினர், மாணவர்கள் மத்தியில் குறிப்பாகவும் வெகுவாகக் குறைந்து வருவதைக் காண முடிகின்றது.

சமூக ஊடகங்களில் சில வரிகளை மேய்வதும், காணொளிகளைக் காண்பதும் வாசிப்பிற்கு ஈடாகாது. ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்து, அதன் பக்கங்களைப் புரட்டி, எழுத்தாளரின் சிந்தனை ஓட்டத்துடன் பயணிக்கும் ஆழ்ந்த அனுபவத்தை எந்தத் தொழில்நுட்பக் கருவி யாலும் முழுமையாகத் தந்துவிட முடியாது.


இந்தத் தலைமுறையினரிடம் அறிவு இல்லையென்று சொல்ல முடியாது. அவர்களிடம் தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் ஆழமான அறிவும் அதைச் சிந்தித்து அலசும் ஞானமும் இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகும். முந்தைய தலைமுறையினரில் பலர், கல்வித் துறையில் பட்டங்களைப் பெறாதவர்களாக இருந்தாலும் அவர்களிடம் பரந்த வாசிப்பு இருந்தது. அவர்கள் பெற்றிருந்த அறிவு இன்றைய பட்டதாரிகளிடம் கூட இல்லை எனலாம்.

வாசிப்பு என்பது வெறும் தகவல்களைத் திரட்டுவது மட்டுமல்ல, அது ஒருவரின் சிந்தனைத் திறனை வலுவாக்கும் ஒரு சிறந்த பயிற்சியாகும். வாசிப்பு நினைவாற்றலை அதிகரிக்கிறது; சொல் களஞ்சியத்தைப் பெருக்குகிறது; எழுதும் திறனை மேம்படுத்துகிறது, படைப்பாற்றலைத் தூண்டுகிறது.

சுருக்கக் கூறின் ஆழமாகவும் தெளிவாகவும் சிந்திக்கும் ஆற்றலுடைய ஒரு சமூகத்தை உருவாக்க, புத்தகங்களின் துணை நமக்கு என்றும் தேவை. வாசிப்புப் பழக்கம் மழுங்கிப் போகும்போது, அதனுடன் சேர்ந்து மனித சமூகத்தின் அறிவும் மங்கிப்போகும்.

எனவே அறிவுள்ள ஒரு சமூகத்தைக் கட்டமைக்க வாசிப்புப் பழக்கத்தை மீட்டெடுப்பது அவசியமாகும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறு வயதிலிருந்தே வாசிப்பின் தேவையை வலியுறுத்த வேண்டும். பள்ளிகள் மட்டங்களில் நூலகங்களை அமைத்து அவற்றை மேம்படுத்தி வாசிப்புக் கலாசாரத்தை வளர்க்க வேண்டும்.

நமது எதிர்காலத் தலைமுறையினர் வாசிப்பை நேசிப்போராக மாற வேண்டும்.



படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2 (f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No: 5353A1/2.20)

**LKG to XII Std**

**+1 COURSES OFFERED**

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with 'B' Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

**OPENING SOON**

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

**63809 80363 / 04374-222123**

admissions@rdbcas.edu.in

என்றென்றும்

# நிலநடுக்கம்

- ப. அப்துர் ரஹ்மான்

**பூமி தனது நடுக்கத்தால் கடுமையாக நடுக்கப்படும்போது.. பூமி தன் சுமைகளை (வெளியே) தள்ளிவிடும்போது, அதற்கு என்ன நேர்ந்தது? என்று மனிதன் கேட்கும்போது, அந்நாளில் பூமி தனது செய்திகளை அறிவிக்கும். ஏனெனில், உமது இறைவன் அதற்கு (அவ்வாறு செய்ய) கட்டளையிட்டிருப்பான் - (திருக்குர்ஆன் 99:1-5)**

உலகின் எங்கோ ஒரு மூலையில் நிலநடுக்கம் என்ற செய்தியைக் கேட்டதுமே நம்மில் பெரும்பாலோருக்கு இதயம் நடுநடுங்கும். அதற்குக் காரணம் நில நடுக்கம் ஏற்படுத்தும் பாதிப்புகளே. பொருட்சேதம் உயிர் சேதம் என்று கணக்கிட முடியாத அளவிற்குப் பல ஆண்டுகளாகக் கட்டித் காத்த கனவுகளை சில நொடிகளில் தவிடுபொடியாக்கி விட்டுச் சென்றுவிடும்.

எனவே மற்றெந்த இயற்கை அழிவை விடவும் நிலநடுக்கம் அதிக பயத்தை உண்டாக்குகிறது என்பதில் ஐயம் இல்லை. இந்த நிலநடுக்கம் ஏதோ ஒரு நாள் உலகின் ஏதோ ஒரு மூலையில் நிகழ்கிறது என்று நாம் நினைத்தால் அது தவறு. உண்மையில் நிலநடுக்கம் என்பது உலகில் தினசரி நிகழ்வாகும் என்பதே உண்மை.

நாம் வாழும் இந்தப் பூமி, வெளியிலிருந்து பார்ப்பதற்கு அழகான கோள வடிவமான பந்து போலத் தெரிந்தாலும், அதன் உட்புற இயக்கத்தைப் பார்க்கும்போது நாம் எதன் மீது வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்தால் திடுக்கிட வைக்கும்.

நாம் வாழும் இந்த பூமி மூன்று முக்கிய அடுக்குகளால் ஆனது.

**மேற்படலம்**(Crust): இது நாம் வாழும் வெளிப்புற அடுக்கு. கடல்களுக்கு அடியில் 5 முதல் 10 கி.மீ வரையிலும், கண்டங்களுக்கு அடியில் சுமார் 70 கி.மீ வரையிலும் இது நீண்டுள்ளது.

**மாந்தல்**(Mantle): இது சுமார் 2,900 கி.மீ ஆழம் வரை நீள்கிறது. இங்கு பாறைகள் அதிக வெப்பம் காரணமாக அரை உருகிய நிலையில் காணப்படுகின்றன.

**மையகம்**(Core): இது பூமியின் மையப்பகுதி, சுமார் 6,370 கி.மீ ஆழம் வரை பரவியுள்ளது.

**டெக்டானிக் தட்டுகள்:** நகரும் கண்டங்கள் பூமியின் மேற்படலமும் மாந்தலின் மேற்பகுதியும் சேர்ந்து லிதோஸ்பியர் (Lithosphere) எனும் உறுதியான அடுக்கை உருவாக்குகின்றன. இந்த அடுக்கு ஒரு முழுமையான ஓடாக இல்லாமல், பல துண்டுகளாக உடைந்து காணப்படுகிறது. இவையே டெக்டானிக் தட்டுகள்(Tectonic Plates) ஆகும். இவை பூமியின் மேற்புறத்தில் இருந்து சுமார் 100 கி.மீ ஆழம் வரை மட்டுமே அமைந்துள்ளன. இவற்றில் பெரிய தட்டுகள் 5,000 முதல் 15,000 கி.மீ நீளமுடையவை; சிறியவை சில நூறு கிலோமீட்டர்கள் வரை இருக்கும்.

லிதோஸ்பியருக்குக் (மேற்படலம், மாந்தலின் கடினப் பகுதி) கீழே மாந்தலின் மென்மையான, அரை உருகிய(Semi molten) பகுதி உள்ளது. இது அஸ்தீனோஸ்பியர்(Asthenosphere) எனப்படுகிறது. டெக்டானிக் தட்டுகள் அதன் மேல் மிதந்த வண்ணம் மெதுவாக நகர்கின்றன.

### மலைகளின் பிறப்பு


இரண்டு டெக்டானிக் தட்டுகள் ஒன்றை ஒன்று நோக்கி நகர்ந்து மோதிக் கொள்ளும் போது குறிப்பாக இரண்டு கண்டத் தட்டுகள் மோதும் போது ஏற்படும் அதீத அழுத்தத்தால் நிலப்பரப்பு மடிந்து(Fold) மேல்நோக்கி உயர்கிறது. இதுவே பிரம்மாண்டமான மலைத் தொடர்களை உருவாக்குகிறது.

இன்று நாம் காணும் இமயமலைத் தொடர் இந்தியத் தட்டும் யூரேசியத் தட்டும் ஒன்றையொன்று மோதி அழுத்துவதால் வெளிப்பட்ட ஒன்றே ஆகும். இந்த அழுத்தம் இன்றும் தொடர்வதால் எவரெஸ்ட் சிகரம் ஆண்டுக்குச் சுமார் 5 மில்லிமீட்டர் வரை உயர்ந்து கொண்டே இருப்பதாகக் கூறப்படுகிறது.

மலைகள் மேலே மட்டும் வளர்வதில்லை; அவை பூமிக்கு அடியிலும் ஆழமாகச் செல்கின்றன. மலை உருவாகும் அதே நேரத்தில், மேற்படலத்தின் ஒரு பகுதி கீழ்நோக்கித் தள்ளப்படுகிறது. இது மலை வேர்(Mountain Root) என்று அழைக்கப்படுகிறது. மலையின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க, அதன் வேரும் பூமிக்கு அடியில் ஆழமாகச் செல்லும். இந்த வேர்களே மலைகளின் எடையைத் தாங்கிக்கொண்டு அவை சரிந்துவிடாமல் காக்கின்றன.

பொதுவாக ஒரு மலையின் உயரம் எவ்வளவு இருக்கிறதோ, அதைவிட சுமார் 5 முதல் 6 மடங்கு பூமிக்கு அடியில் அதன் வேர் ஊன்றி இருக்கும். இமயமலை போன்ற உயர்ந்த மலைகளுக்கு அடியில் சுமார் 60 முதல் 70 கிலோமீட்டர் ஆழம் வரை வேர் படர்ந்துள்ளது.

டெக்டானிக் தட்டுகள் எப்போதும் நகர்ந்து கொண்டிருப்பதால் அதன் மேற்பரப்பு கண்டங்களும் அதனால் உருவான மலைகளும் அதனுடன் சேர்ந்து நகர்கின்றன.



## நிலநடுக்கம்

டெக்டானிக் தட்டுகள் ஆண்டுக்கு சராசரியாக 2 முதல் 5 சென்டிமீட்டர்கள் மட்டுமே நகர்கின்றன. இந்த வேகம் நமது நகங்கள் வளரும் வேகத்திற்கு இணையானது என்றாலும், பல மில்லியன் ஆண்டுகளில் கண்டங்களையே இடம்பெயரச் செய்துள்ளது.

டெக்டானிக் தட்டுகள் ஒன்றோடொன்று மோதும் போதோ அல்லது பக்கவாட்டில் உராய்ந்து செல்லும் போதோ, அவற்றுக் கிடையே பெரும் அழுத்தம்(Pressure) உருவா கிறது. இந்த அழுத்தம் காரணமாக பாறைகள் திடீரென நகரும் போது நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

இதே நிகழ்வு கடலுக்கு அடியில் உள்ள தட்டுகளில்(Oceanic Plates) நடக்கும்போது அதாவது கடலடியில் ஒரு தட்டு மற்றொரு தட்டிற்குக் கீழே அமிழும் போதோ அல்லது திடீரென மேல்நோக்கித் தள்ளப்படும் போதோ, கடல் நீர் மட்டத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படுகிறது. இது மிகப்பெரிய அளவு நீரை தள்ளி இடமாற்றம் செய்கிறது. அதுவே சுனாமி எனப்படுகிறது.

அதேபோல், தட்டுகள் விலகும் போதோ அல்லது மோதும் போதோ ஏற்படும் பிளவு களின் வழியாக, பூமியின் உட்புறத்தில் உருகிய நிலையில் உள்ள பாறைக் குழம்பு எனப்படும் மாக்மா(Magma) வெளியேறு வதால் எரிமலைகள் உருவாகின்றன.

> ஒவ்வொரு நாளும் உலகில் 100-150 நிலநடுக்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்ற தகவல் வியப்பாக இருக்கிறதல்லவா?

இயற்கையின் பிரம்மாண்டமான விசை களால் நகரும் டெக்டானிக் தட்டுகளை மனிதர் களால் கட்டுப்படுத்தவோ அல்லது அவற்றின் திசையை மாற்றவோ முடியுமா? என்ற கேள்வி பலருக்கும் உண்டு. அதற்கான அறிவியல் பூர்வமான உண்மைகள் இதோ:

பொதுவில் மனிதர்கள் மேற்கொள்ளும் சுரங்கம் தோண்டுதல், எண்ணெய், இயற்கை எரிவாயு எடுப்பு போன்ற செயல்பாடுகள் பெரும்பாலும் பூமியின் மேற்படலத்தின் அதாவது அதிகபட்சமாக 15 கிலோமீட்டர் வரையில் நடைபெறுகின்றன. இவை சிறு அதிர்வுகளைத் தூண்டலாமே தவிர, 100 கி.மீ ஆழமுடைய டெக்டானிக் தட்டுகளின் திசை யையோ அல்லது வேகத்தையோ மாற்றும் அளவுக்கு வலிமையானவை அல்ல.

## நிலநடுக்கங்களை அளவிடுவது எப்படி?

நிலநடுக்கங்களைப் பதிவு செய்ய செய்ஸ் மோகிராப்(Seismograph) எனப்படும் மிக உணர்திறன் கொண்ட கருவிகள் பயன்படுத் தப்படுகின்றன. ரிக்டர் அளவுகோல் என்பது அந்த நிலநடுக்கத்தின் வலிமையை 0 முதல் 10 வரையிலான எண்களில் குறிப்பிடப் பயன்படுகிறது. ரிக்டர் அளவில் ஒவ்வொரு எண் கூடும்போதும் நிலநடுக்கத்தின் வேகம், அதன் ஆற்றல் அதிகரிப்பை அது உணர்த்து கிறது என்பது பொருள்.

பூமியின் பல பகுதிகளில் நிறுவப்பட் டுள்ள ஆயிரக்கணக்கான கண்காணிப்பு நிலை யங்களில் இந்தக் கருவிகள் நில அதிர்வு களைப் பதிவு செய்கின்றன.

ஒவ்வொரு நாளும் உலகில் 100-150 நிலநடுக்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்ற தகவல் வியப்பாக இருக்கிறதல்லவா?

தினசரி ஏற்படும் நிலநடுக்கங்களில் பெரும்பாலானவை ரிக்டர் அளவில் மூன்றுக் குக் குறைவானவை. இவ்வளவு சிறிய நிலநடுக்கங்கள் உருவாக்கும் அதிர்வுகள் மிகவும் பலவீனமானவை. இவை மனிதர் களால் உணர முடியாத அளவுக்கு மிகக் குறைந்த ஆற்றலைக் கொண்டவை.

சில நிலநடுக்கங்கள் பூமியின் ஆழமான பகுதிகளில்(Focus) உருவாகின்றன. ஆழத்தில் உருவாகும் நில அதிர்வலைகள் (Seismic Waves) பல திசைகளில் பரவி, மேற்பரப்பை அடையும் போது அவற்றின் ஆற்றல் பெருமளவு குறைந்து விடுகிறது. நிலநடுக்கத்தின் மையப்புள்ளியில்(Epicenter) இருந்து நாம் வெகு தொலைவில் இருந்தாலும் அதிர்வுகளை உணர முடியாது.

இங்கு தான் செய்ஸ்மோகிராப் முக்கியத்துவம் பெறுகிறது. மனிதர்களால் உணர முடியாத மிகச்சிறிய அதிர்வுகளையும் இந்தக் கருவிகள் துல்லியமாகப் பதிவு செய்கின்றன.

**நவீன கண்காணிப்பு:** NCS USGS

இன்று நிலநடுக்கங்கள் குறித்த தகவல்கள் மிகவும் வெளிப்படையானவை. இந்தியாவில் நிலநடுக்கங்களை அதிகாரப்பூர்வமாக கண்காணிக்கும் பொறுப்பு National Centre for Seismology (NCS) அமைப்பிடம் உள்ளது.

இது தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் பல உயர் உணர்திறன் கொண்ட செய்ஸ்மோகிராப்(Seismograph) நிலையங்களை நிறுவியுள்ளது.

நிலநடுக்கத் தரவுகள் ஒரு நாட்டோடு மட்டும் நின்று விடுவதில்லை. உலகளாவிய அறிவியல் தரவு பகிர்வு முறையின் மூலம் இவை சர்வதேச அமைப்புகளுடன் பகிரப் படுகின்றன.

சர்வதேச அளவில் United States Geological Survey(USGS) அமைப்பு உலகளாவிய தரவுகளை ஒன்றிணைத்து, உலகில் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படும் சிறிய அதிர்வுகளைக் கூடத் துல்லியமாகக் கணக்கிட்டு வெளியிடுகிறது.

நிலநடுக்கம் பற்றிய விவரங்களை சம்பந்தப்பட்ட வலைதளத்தில் புள்ளிவிவரங்கள் உடனுக்குடன் (Real time) புதுப்பிக்கப் படுவதைப் பார்ப்பது வியப்பாகவும், அதே சமயம் அறிவியல் ரீதியாகப் பல உண்மைகளைப் புரிந்துகொள்ளவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

> “நிலநடுக்கம் ஓர் இயற்கை நிகழ்வு என்று சாதாரணமாகக் கடந்து போக முடியாது. மரணம் என்பது மனித வாழ்வில் எப்படி தவிர்க்க முடியாத நிகழ்வோ அது போல உலக முடிவும் தவிர்க்க முடியாத ஒன்றே.”

நிலநடுக்கம் ஓர் இயற்கை நிகழ்வு என்று சாதாரணமாகக் கடந்து போக முடியாது. மரணம் என்பது மனித வாழ்வில் எப்படி தவிர்க்க முடியாத நிகழ்வோ அது போல உலக முடிவும் தவிர்க்க முடியாத ஒன்றே.

பூமியின் மேற்பரப்பு மரங்களாலும் மலைகளாலும் மிகவும் அழகாகக் காட்சியளிக்கிறது; ஆனால் அதன் உட்புறமோ அபாயகரமான விஷயங்களைக் கொண்டுள்ளது. பூமி அண்ட வெளியிலிருந்தும் அதன் உட்புறத்திலிருந்தும் ஆபத்துக்களால் சூழப்பட்டுள்ளது என்பதை நாம் இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால், மனிதன் இதனை உணராமல் தன் பெருமையையும், அகங்காரத்தையும், அதிகாரத்தையுமே காட்டுகிறான்; அதன் மூலம் தான் மற்றவர்களை விட உயர்ந்தவன் என்பதை நிலைநாட்ட விரும்புகிறான். அவன் அவ்வாறே சிந்தித்து, அவ்வாறே நடந்தும் கொள்கிறான். இத்தகைய மனப்பான்மை கொண்டவர்களுக்கு இறைவன் இவ்வாறு கூறுகிறான்

‘பூமியில் பெருமையுடன் நடக்காதே! ஏனென்றால், நிச்சயமாக உம்மால் பூமியைப் பிளந்து விடவும் முடியாது; மலையின் உயரத்திற்கு உயர்ந்து விடவும் முடியாது (திருக்குர்ஆன் 17:37)

# உங்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பவன் யார்?

(நபியே,[38] இந்த இணைவைப்பாளர்களிடம்) கூறும்: அல்லாஹ்வை விடுத்து உங்களின் கடவுளர்களாக நீங்கள் யாரைக் கருதுகின்றீர்களோ அவர்களை அழைத்துப் பாருங்கள்.[39] அவர்கள் வானங்களிலோ பூமியிலோ உள்ள அணுவளவு பொருளுக்கும் உரிமையுடையவர்களல்லர். வானம் மற்றும் பூமியின் உடைமையில் அவர்கள் பங்காளியாகவும் இல்லை. அவர்களில் யாரும் அல்லாஹ்வுக்கு உதவி புரிபவர்களாயும் இல்லை. மேலும், அல்லாஹ்விடத்தில் எந்த ஒரு பரிந்துரையும் யாருக்காகவும் பயனளிக்க முடியாது - யாருக்கு அல்லாஹ் பரிந்துரை வழங்க அனுமதி தந்திருக்கின்றானோ அவரைத் தவிர![40] இவ்வாறு மக்களுடைய உள்ளங்களிலிருந்து அச்சம் அகலும்போது (பரிந்துரைப்பவர்களிடம்) 'உங்களுடைய இறைவன் என்ன பதிலுரைத்தான்?' என்று அவர்கள் கேட்பார்கள். அதற்கு, 'சரியான பதில் தந்துள்ளான். அவன் மிக உயர்ந்தவனாகவும் மாபெரியவனாகவும் இருக்கின்றான்' என்று கூறுவார்கள்.[41]

(நபியே,) இவர்களிடம் கேளும்: 'வானங்கள் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பவன் யார்?' கூறும்: 'அல்லாஹ்தானே!'[42] - இப்போது திட்டவட்டமாக நம் இருவரில் நாமோ அல்லது நீங்களோ யாராவது ஒருவர்தான் நேர்வழியில் இருக்கின்றோம். அல்லது வெளிப்படையான வழிகேட்டில் வீழ்ந்திருக்கின்றோம்.'[43]

● **அத்தியாயம் 34 ஸபா** ● **திருவசனங்கள் : 22-24**

**38.** இதற்கு முந்தைய 21 வசனங்களில் மறுமைக் கோட்பாடு தொடர்பான இணைவைப்பாளர்களின் தவறான கருத்தோட்டங்கள் குறித்து பேசப்பட்டது. இப்போது உரையின் போக்கு இணைவைப்பை மறுத்துரைத்தலின் பக்கம் திரும்புகின்றது.

**39.** தனிமனிதர்கள், சமூகங்கள், சாம்ராஜ்யங்கள் என அனைத்தின் விதிகளையும் அல்லாஹ் ஆக்கவும் செய்கின்றான்; அழிக்கவும் செய்கின்றான். இதனைத்தான் இது வரை நீங்கள் தாவூத்(அலை), சுலைமான் (அலை), ஸபா சமூகத்தார் போன்றோரின் விவரங்களிலிருந்து அறிந்து கொண்டீர்கள். இப்போது சற்றே நீங்களாகவே உருவாக்கிக் கொண்டுள்ள அந்தப் போலி தெய்வங்களைத்தான் அழைத்துப் பாருங்களேன்! ஒருவரை செல்வச் செழிப்பான நிலையிலிருந்து வறிய நிலைக்கும், வறுமையிலிருந்து வளமைக்கும் தாழ்த்தவோ, உயர்த்தவோ செய்கின்ற வல்லமையும் சக்தியும் அந்தப் போலி தெய்வங்களிடமும் இருக்கின்றனவா, என்ன?

**40.** ஒருவர் சுயமாக அதிபதியாகவோ, அல்லது உரிமையில் பங்காளியாகவோ, அல்லது இறைவனுக்கு உதவியாளராகவோ இருப்பது இருக்கட்டும், அல்லாஹ்வின் அவையில் அவனுக்கு முன்னால் எழுந்து நின்று எவரேனும் ஒருவருக்கு ஆதரவாக பரிந்துரைக்கின்ற ஆற்றல் கூட இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தில் எவருமே இல்லை. இறைவனின் அன்புக்குப் பாத்திரமான நேசர்கள் சிலர் இருக்கின்றார்கள் என்கிற, அல்லது இறைவனின் அவையில் இறைவனுக்கு முன்னால் எழுந்து நின்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டாலே அதனை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டிய

*28 ஆம் பக்கம் பார்க்க...*

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# எல்லையில்லாப் பேராசை

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**‘ஆதமின் மகனுக்கு இரண்டு பள்ளத்தாக்குகள் நிறைய செல்வம் இருந்தாலும் மூன்றாவதாக இன்னொரு பள்ளத்தாக்கு நிறைய செல்வம் வேண்டும் என்றே அவன் ஆசைப்படுவான். ஆதமின் மகனுடைய வயிற்றை மண்ணால் மட்டுமே நிரப்ப முடியும். பாவமன்னிப்புக் கோரி இறைவனின் பக்கம் மீண்டு விட்டவரின் கோரிக்கையை இறைவன் ஏற்றுக்கொள்கின்றான்.’**

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ்(ரலி)

நூல் : புகாரி

ஸஹீஹ் புகாரியில் பதிவாகியிருக்கின்ற இன்னொரு நபிமொழியில் ‘ஆதமின் மகனுக்கு ஒரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் தரப்பட்டாலும் அவன் இரண்டாவதாக இன்னொரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் வேண்டும் என்று ஆசைப்படுவான். அது கிடைத்து விட்டாலும், மூன்றாவதாக மற்றுமொரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் வேண்டும் என்று அவன் ஆசைப்படுவான். ஆதமின் மகனுடைய வயிற்றை மண்ணால் மட்டுமே நிரப்ப முடியும்’ என்கிற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

பொன்னாசை, பணத்தாசை ஆகியவற்றுக்கு எல்லையே இல்லை என்பது இந்த நபிமொழியிலிருந்து தெரிகின்றது. மனிதனுக்கு என்னதான் மிகப்பெரும் அளவில் செல்வமும் பொருளும் கிடைத்துவிட்டாலும் அதனால் அவனுக்கு மன நிறைவு கிடைக்காது. மேன்மேலும் கிடைக்க வேண்டும் என்றே அவன் விருப்பப்படுவான். எதுவரை எனில், அந்த ஆசையுடனேயே அவன் இறந்து மண்ணோடு மண்ணாகி விடுகின்றான்.

என்றாலும் எவர்கள் பாவமன்னிப்புக் கோரி இறைவனின் பக்கம் மீண்டு விடுகின்றார்களோ, அவனுடைய கருணைப் பார்வையில் தஞ்சம் புகுகின்றார்களோ இறைவன் அவர்கள் மீது தனி அருளைப் பொழிகின்றான். அவர்கள் தங்களின் அதிபதியை அடைந்துவிட்ட பிறகு வேறெந்தத் தேவையும் இல்லாதவர்களாய் ஆகிவிடுகின்றார்கள். இந்த உலகத்தின் ஒட்டுமொத்த செல்வங்களைக் காட்டிலும் இறை உவப்பைப் பெறுவதை மட்டும்தான் அவர்கள் பன்மடங்கு அதிகமாக விரும்புவார்கள்.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

கட்டாயத்துக்கு இறைவனே ஆளாகிவிடுவான் என்கிற அளவுக்கு இறைவனின் அவையில் சிலருடைய செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கின்றது என்கிற தவறான கருத்தில் நீங்கள் விழுந்து கிடக்கின்றீர்கள். உண்மை நிலை என்னவெனில், அங்கு இறைவனின் அனுமதியின்றி எவருக்கும் வாய் திறப்பதற்கும் திராணி இருக்காது. எவருக்கு அனுமதி கிடைக்கின்றதோ அவர் மட்டுமே அங்கு எதையும் சொல்லத் துணிவார். மேலும் எவருக்கு ஆதரவாக பரிந்துரைக்கலாம் என்று அவருக்கு அனுமதி தரப்படுகின்றதோ அவருக்கு ஆதரவாக மட்டும்தாம் அவர் எதையும் முறையிடவோ, எடுத்துரைக்கவோ செய்வார். (பரிந்துரை தொடர்பான இஸ்லாமியக் கோட்பாட்டுக்கும் பரிந்துரை தொடர்பான இணைவைப்புக் கோட்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்குப் பார்க்க: திருக்குர்ஆன் 10:5,23; திருக்குர்ஆன் 11:84,106; திருக்குர்ஆன் 16:64,79; திருக்குர்ஆன் 20:86; திருக்குர்ஆன் 21:27; திருக்குர்ஆன் 22:125)

**41.** மறுமை நாளன்று பரிந்துரையாளர் எவரேனும் ஒருவருக்கு ஆதரவாக பரிந்துரைப்பதற்கான அனுமதி கோருகின்ற வேளையில் என்னவெல்லாம் நடக்கும் என்பது பற்றிய விவரம் இங்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவனிடம் அனுமதி கோரிவிட்ட பிறகு பரிந்துரையாளரும் சரி, எவருக்காக அவர் பரிந்துரைக்க நாடுகின்றாரோ அந்த மனிதரும் சரி, இருவருமே எத்தகைய தவிப்பும் ஏக்கமும் நிறைந்த நிலையில் அஞ்சியவாறும் உள்ளம் நடுங்கியவாறும் இறைவனிடமிருந்து பதிலுக்காகக் காத்திருப்பார்கள் என்கிற காட்சியை இந்தச் சித்திரம் நமக்கு முன்னால் தத்ரூபமாகக் கொண்டு வந்து நிறுத்திவிடுகின்றது.

இறுதியில் மேலேயிருந்து அனுமதி வந்துவிடுகின்ற போது, பரிந்துரையாளரின் முகத்திலிருந்தே மனநிறைவான செய்தி கிடைத்திருப்பதை பரிந்துரையை எதிர்பார்த்து நிற்கின்ற மனிதர் உணர்ந்து கொள்வார். அப்போதுதான் அவருக்குப் போன உயிர் திரும்பி வரும். மேலும் அவர் சற்றே முன்னால் சென்று பரிந்துரையாளரிடம், 'என்ன பதில் வந்தது?' என்று வினவுவார். பரிந்துரையாளரும், 'நல்ல செய்திதான். அனுமதி கிடைத்துவிட்டது' என்று பதில் தருவார்.

இந்த விவரணை இங்கு விவரிக்கப்படுவதன் நோக்கமே, 'அறிவில்லாதவர்களே! இறைவனின் அவையின் மதிப்பும் மாண்பும் மகத்துவமும் இந்த அளவுக்குத் திகிலையும் மலைப்பையும் ஏற்படுத்துவதாக இருக்க, அங்கு எவரோ ஒருவர் தன்னுடைய செல்வாக்கால் உங்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கப்படுவதை உறுதி செய்துவிடுவார் என்றும், எவரோ ஒருவர் அவனுக்கு முன்னால் குதித்தும் அமர்ந்தும், 'இந்த மனிதர் எனக்கு ரொம்ப வேண்டியவர். இவரை நீ மன்னித்துதான் ஆக வேண்டும்' என்று பிடிவாதம் பிடிப்பார் என்றும் என்ன மாதிரியான கற்பனைகளில் உழன்று கொண்டிருக்கின்றீர்கள்?' என்று உண்மை நிலையை உணர்த்தி சிலிர்த்தெழச் செய்வதுதான் இதன் நோக்கமாகும்.

**42.** கேள்விக்கும் பதிலுக்கும் இடையில் ஒரு நுட்பமான வெற்றிடம் உள்ளது. இணைவைப்பாளர்களை விளித்து கருத்துரைக்கப்படுகின்றது. அவர்களோ இறைவனை ஏற்க மறுப்பவர்கள் அல்லர்; இறைவனை ஏற்றுக்கொண்டவர்கள் ஆவர். அதற்கும் மேலாக வாழ்வாதாரங்கள், அருட்கொடைகள், வளங்கள் அனைத்தின் திறவுகோல்களும் இறைவனிடம்தான் இருக்கின்றன என்பதை அறிந்தவர்கள்; அதற்கும் மேலாக அதன் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள். ஆனாலும் அதையும் தாண்டி அவர்கள் இறைவனின் இறைமையில் மற்றவர்களையும் பங்காளிகளாய்ச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் 'வானங்கள், பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம்

அளிப்பவன் யார்?' என்று அவர்களிடம் வினவப்பட்ட போது அவர்கள் திகைத்துப் போய் பெரும் சிரமத்துக்கு ஆளாகிவிட்டார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எவருடைய பெயரைச் சொன்னாலும் தம்முடைய நம்பிக்கைக்கு எதிராக, தம்முடைய சமுதாயத்தாரின் நம்பிக்கைக்கு நேர்மாற்றமான பதிலைச் சொல்லியதாக அது ஆகிவிடும். பிடிவாதத்தின் விளைவாக அப்படியே இது போன்று ஏதேனும் ஒன்றைச் சொல்லிவிட்டாலும்கூட அதனை மறுத்துரைத்துக் கொண்டு தம்முடைய சமுதாயத்தாரே தமக்கு எதிராக நின்று விடுவார்களோ என்கிற அச்சமும் அவர்களுக்கு இருந்தது. அல்லாஹ்தான் வாழ்வாதாரத்தைத் தருகின்றவன் என்பதை ஏற்றுக் கொண்டாலோ, 'பிறகு இறைவனின் பங்காளிகளாய் நீங்கள் ஆக்கிக் கொண்டிருக்கின்ற இவர்களால் உங்களுக்குக் கிடைக்கின்ற நன்மைதான் என்ன?' என்கிற இரண்டாவது கேள்வி உடனே பேருருவம் எடுத்து நிற்கும்.

வாழ்வாதாரத்தைத் தருபவன் அல்லாஹ்வாக இருக்க, வழிபாடும் வணக்கமும் மற்றவர்களுக்காகவா? நல்லா இருக்கே உங்கள் நியாயம்? உங்களின் அறிவு எங்கே போய்த் தொலைந்தது? இந்த யதார்த்தத்தைக் கூடவா உங்களால் விளங்கிக் கொள்ள முடியாமல் போனது? என்கிற ரீதியில் அடுத்தடுத்து கேள்விகள் துளைத்தெடுக்கும். இவ்வாறு இரண்டு நிலைகளிலும் அடி வாங்குகின்ற இக்கட்டில் சிக்கித் திணறி அவர்கள் மூச்சடைத்துப் போய் நின்று விடுகின்றார்கள். வாழ்வாதாரத்தைத் தருபவன் அல்லாஹ்தான் என்று உண்மையை உரத்துச் சொல்லவும் முடியாது; வாழ்வாதாரம் தருபவர்களும் வழிபாட்டுக்குரியவர்களும் வேறு எவரோ என்றும் வாய் விட்டுச் சொல்ல முடியாது. பேந்தப் பேந்த முழிப்பார்கள். கேள்வி எழுப்பியவர் இந்த மக்கள் எதுவும் சொல்லாமல் முழிப்பதைப் பார்த்து, தன்னுடைய கேள்விக்குத் தானே பதில் தந்துவிடுகின்றார்: 'அல்லாஹ்தான்' என்று!

**43.** இந்த வாசகத்தில் அழைப்புப் பணி, பரப்புரைப் பணி ஆகியவற்றுக்கான விவேகம் தொடர்பான மிக முக்கியமான குறிப்பு பொதிந்திருக்கின்றது. எவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து, அவனை மட்டுமே வழிபட்டும் வாழ்கின்றாரோ அவர் நேர்வழியில் இருப்பவர் ஆவார்; மேலும் எவர் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்கு அடிபணிந்து, மற்றவர்களை வழிபட்டும் வாழ்கின்றாரோ அவர் வழிகேட்டில் வீழ்ந்துவிட்டவர் ஆவார் என்பதுதான் மேலே தரப்பட்ட கேள்வி பதிலின் இயல்பான, தர்க்கரீதியான விளைவு ஆகும். இந்த அடிப்படையில் இங்கு, 'நாங்கள்தாம் நேர்வழியில் இருக்கின்றோம்; நீங்கள் வழிகேட்டில் வீழ்ந்து கிடக்கின்றீர்கள்' என்று அல்லவா, பதில் தந்து முடித்திருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு வெட்டு ஒன்று, துண்டு இரண்டு கணக்காக, கறாராகச் சொல்வது சத்தியத்தை எடுத்துரைத்தல் என்கிற கோணத்தில் என்னதான் மிக மிகப் பொருத்தமான பதிலாக இருந்தாலும் விவேகம் நிறைந்த அழைப்புப் பணி என்கிற கோணத்தில் பார்க்கின்ற போது அது பொருத்தமான பதிலாக இராது.

ஏனெனில் நீங்கள் எவரேனும் ஒருவரை முகத்துக்கு நேராகப் பார்த்து தெள்ளத் தெளிவாக 'நீர் வழிகேட்டில் விழுந்துகிடக்கின்றீர்!' என்று சொல்லிவிட்டு தம்மைத் தாமே நேர்வழியில் இருப்பவராக உரத்து முழங்கினீர்கள் எனில் அவர் பிடிவாதத்தில் இறங்கிவிடுவார்; மேலும் அவருடைய இதயத்தின் வாசல்கள் அனைத்தையும் இழுத்து மூடிக் கொள்வார். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) வெறுமனே சத்தியத்தை எடுத்துரைப்பதற்காக அனுப்பப்படவில்லை. அதற்கு மாறாக அதிகமதிகமான விவேகம் பொருந்திய உத்திகளைக் கையாண்டு வழிகெட்டுப் போய் இருக்கின்ற மக்களைச் சீர்திருத்துகின்ற மகத்தான பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இதனால்தான் வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் இங்கே, 'நபியே! இந்தக் கேள்விக்கான பதிலுக்குப் பிறகு இந்த

மக்களைப் பார்த்து நீங்கள் வழிகேட்டில் இருக்கின்றீர்கள்! நேர்வழியில் நாங்கள் மட்டும் தாம் இருக்கின்றோம் எனத் திட்டவட்டமாகச் சொல்லிவிடுங்கள்' எனக் கூறவில்லை. அதற்கு மாறாக, இப்போது அவர்களை இப்படிச் சொல்லி விளங்க வைக்க முயலுங்கள் என்று அறிவுறுத்துகின்றான்: அவர்களை விளித்துச் சொல்லுங்கள்: 'எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலான வேறுபாடு இப்போது தெள்ளத்தெளிவாக வெளிப்பட்டு விட்டது. அதாவது எவன் வாழ்வாதாரத்தை வழங்குகின்றானோ அவனை மட்டுமே நாங்கள் அடிபணிதலுக்கும் வழிபாட்டுக்கும் உரித்தானவனாகக் கருதுகின்றோம். மேலும் நீங்களோ எவர் வாழ்வாதாரத்தை வழங்கவில்லையோ அவரை வணக்கத்துக்குரியவராக ஆக்கிக் கொண்டிருக்கின்றீர்கள்.

இந்த நிலையில் நாம் இரு தரப்பினரும் ஒரே நேரத்தில் நேர்வழியில் இருப்பதற்கான சாத்தியம் இல்லை. இந்தத் தெள்ளத்தெளிவான வேறுபாட்டுக்குப் பிறகு நம்மில் ஒரு தரப்பினர் மட்டுமே நேர்வழியில் இருப்பவர்கள் ஆவர். மறு தரப்பினரோ வழிகெட்டுப் போனவராக இருப்பது உறுதி. இதன் பிறகு உறுதியான சான்றுகள் எவரை நேர்வழியில் இருப்பவராக உணர்த்துகின்றது; எவர் அந்தச் சான்றின் அடிப்படையில் வழிகெட்டவராக ஆகின்றார் என்கிற கோணத்தில் யோசித்து தீர்மானிக்க வேண்டியது உம்முடைய பொறுப்பு ஆகும்'.

*(தொடரும்)*


HIJAZ

LEATHERS PVT. LTD.,

Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# பெண் என்னும் அருள்வளம்

- பானு ஹமீத்

**பிரசவத்திற்குப் பிறகு ஈஸ்ட்ரோஜன், புரோ ஜெஸ்ட்டிரோன் ஹார்மோன்களில் ஏற்படும் குறைபாடுகள், தூக்கக் குறைபாடுகளும் அவர்களை மனச் சோர்வுடன் வைக்கிறது. மேலும் பலருக்குப் பிரச வத்திற்கு பின் எதிர்மறை எண்ணங்களும், மனக் கவலைகளும் உருவாகும்.**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் இரு பெண் குழந் தைகளுக்கு அவர்கள் பருவ வயதை அடையும் வரை செலவு செய்கிறாரோ அவரும் நானும் மறுமை நாளில் இவ்வாறு இருப்போம் என நபி(ஸல்) அவர்கள் தனது இரு விரல்களை இணைத்துக் காட்டினார்கள்'

'யார் ஒருவர் மூன்று பெண்குழந்தைகள் பெற்று, அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து அவர்களுக்கு உண்ணவும், பருகவும், ஆடை அணியவும் கொடுக்கிறாரோ, அத்தகையவருக்கு மறுமை நாளில் நரகத்தில் இருந்து பாதுகாக்கும் திரையாக அவர்கள் இருப்பார்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இத்தகைய அருள் வளம் தனது சொந்த பெண் பிள்ளை களை மட்டுமல்ல தனது சகோதரிகள், தாய் தந்தையரின் சகோதரிகள், அநாதைகளையும் பொறுப்பேற்று பராமரிப்பவர் களுக்கும் இது பொருந்தும்.

## கண்ணாடிக் குடுவை

'பெண்கள் கண்ணாடிக் குடுவையைப் போன்றவர்கள்' என்பது நபி(ஸல்) அவர்களின் ஒரு புகழ்பெற்ற ஹதீஸ் ஆகும். பெண்கள் மிகவும் மென்மையானவர்கள், உணர்வுப்பூர்வமான வர்கள், மதிப்புமிக்கவர்கள் அவர்களை அன்போடும் கனி வோடும் கையாளுங்கள்.

மற்ற எல்லாப் பொருட்களையும் கையாள்வது போன்று கண்ணாடிப் பாத்திரங்களை நாம் கையாள்வதில்லை. அதற்காக மிகவும் கவனத்துடன் பக்குவமாகக் கையாள்வோம். அது போலத் தான் பெண்களையும் நபி(ஸல்) அவர்கள் மிகவும் கவனத்தோடு கையாள வேண்டும் என்பதற்காக இவ்வாறு உவமித்துள்ளார்கள்.



## பாலூட்டும் தாய்மார்கள்

நம் குடும்ப வழமையை உற்று நோக்கினால் முதல் குழந்தையின் பிரசவம் உள்ளிட்ட பல செலவுகளை தாய் வீட்டாரிடம் கட்டாயத்தின் பேரில் ஒப்படைக்கும் வழக்கத்தினைக் காணமுடிகிறது.

இதைத் தொடர்ந்து குழந்தை பிறந்த பிறகு மாப்பிள்ளை வீட்டார் வருகையும் அவர்களைக் குறைவின்றிக் கவனிப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிரப்பமான இரண்டு ஆண்டுகள் பாலூட்டுதல் வேண்டும்; பாலூட்டும் தாய்மார்களுக்கு (ஷரீஅத்தின்) முறைப்படி உணவும், உடையும் கொடுத்து வருவது குழந்தையுடைய தந்தையின் மீது கடமையாகும்; அல்லாஹ்வின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு தன் உயிரை உடைத்து புது உயிரை பிரசவிக்கும் தாய்மார்களை மிகவும் பேணிக்காக்க வேண்டும். இது ஓர் உயிர் அல்ல இரண்டு உயிர்கள்.

தங்களின் ஆரோக்கியம் அடுத்த தலைமுறையின் ஆரோக்கியம். இதை உடன் இருப்பவர்கள் நன்கு உணர்ந்து சிறந்த துணையாக, ஆதரவாளராக நல்ல பராமரிப்பைத் தருதல் வேண்டும்.

## மனச்சோர்வு

இன்றைய காலகட்டத்தில் பிரசவத்திற்குப் பின்வரும் மனச்சோர்வு நோய் பல பின் விளைவுகளை உருவாக்கி உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி விடுகிறது. பெண்களுக்கு இது குறித்த விழிப்பு உணர்வு குறைவாக உள்ளது.

பிரசவத்திற்குப் பிறகு ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்ட்டிரோன் ஹார்மோன்களில் ஏற்படும் குறைபாடுகள், தூக்கக் குறைபாடுகளும் அவர்களை மனச் சோர்வுடன் வைக்கிறது. மேலும் பலருக்குப் பிரசவத்திற்கு பின் எதிர்மறை எண்ணங்களும், மனக்கவலைகளும் உருவாகும்.

இதனைத் தொடர்ந்து தாய்மையின் கடமைகள் ஊண், உறக்கத்தினைக் கெடுப்பதால் இந்த மன அழுத்தம் பெரிதாக மனக் குமுறல்களை ஏற்படுத்தி அடுத்தவர்களுடன் எரிச்சல், கோபம் கொள்ளச் செய்வதோடு அரும்பாடுபட்டு பெற்ற குழந்தையை வெறுக்கின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கூட்டுக் குடும்பங்கள் குறைந்து தனிக் குடும்பங்கள் பெருக இந்தச் சூழலும் ஒரு முக்கியக் காரணமாக உணரப்படுகிறது.

பிரசவத்திற்குப் பிந்தைய மனநோய் 8 தாய்மார்களில் ஒரு நபரைப் பாதிக்கிறது என்று நோய்க் கட்டுப்பாடு தடுப்பு மையங்கள் கூறுகின்றன. இந்த நிலை மாறவேண்டும் என்றால் திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் கலை வகுப்புகள் அவசியமாகிறது. இதுவே சிறந்த குடும்பத்தையும், ஞான மிக்க சந்ததிகளையும் உருவாக்கும் என்பது திண்ணம்.

## உங்களில் சிறந்தவர்

வீட்டில் மனைவிக்குத் துணையாக சமையல், வீட்டு வேலைகளைச் செய்வது மானக்கேடான செயல் என நினைக்கும் ஆண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். வாழ்வை அழகுபட வாழ நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டி இருக்கிறார்கள். தங்களின் மனைவியரைக் கண்ணியத்தோடும், கருணையோடும் நபி(ஸல்) அவர்கள் நடத்தியதை ஆயிஷா(ரலி) அவர்கள், ‘நபி (ஸல்) அவர்கள் உங்களில் ஒருவர் (வீட்டு) வேலைகளைச் செய்வது போன்றே அவர்களும் செய்து வந்தார்கள். வீட்டில் தமது செருப்பைத் தாமே தைப்பார்கள். தமது ஆடையின் கிழிசலையும் தாமே தைப்பார்கள். உணவு தயாரிப்பதிலும் இதர வேலைகளிலும் உதவுவார்கள்’ என்று விளக்குகிறார்கள்.

கணவனின் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள் தான் மனைவி. இந்த உண்மையை நன்கு உணர்ந்தாலே கணவன் மனைவி இணைந்து மனம் ஒத்து வாழ்வார்கள். ‘உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியிடம் சிறந்தவரே’ என அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறியது எத்தனை அர்த்தமிக்கது.

● வி.எஸ். முஹம்மத் அமீன்




*ரேச்சல் கொர்ரியை உங்களுக்கு நினைவிருக்கின்றதா?*

ரேச்சல் கொர்ரி(Rachel Corrie). அமெரிக்காவின் வடமேற்கே அமைந்த வாஷிங்டன் மாநிலத்தில் உள்ள ஒலிம்பியா என்னும் ஊரில் பிறந்தவர். 23 வயதான இளம் பெண் கொர்ரி. ஃபலஸ்தீனின் மீதான இஸ்ரேலின் காட்டுமிராண்டித் தாக்குதல்களைத் தொலைக்காட்சியில் பார்த்து துடித்துப் போனார். ‘இந்தப் பச்சிளம் குழந்தைகளைக் கொல்வதற்கு என்ன நேர்ந்தது?’ கொர்ரி யோசித்தார். வினா எழுப்பினார். இறுதியில் அனைத்துலக ஒற்றுமை இயக்கத்துடன் (International Solidarity Movement) காஸாவிற்குப் பயணமானார்.

காஸா மக்களுடன் நின்று அநீதிக்கெதிராகக் குரல் எழுப்பினார் கொர்ரி. இஸ்ரேல் அவரை மிரட்டியது. எச்சரித்தது. எதற்கும் அஞ்சவில்லை. தனது போராட்டத்தை வீரியத்துடன் நகர்த்தினார். 2003 மார்ச் 16, ஃபலஸ்தீனக் குடியிருப்புப் பகுதிகளை இஸ்ரேல் இடித்துத் தரைமட்டமாக்கிக் கொண்டிருந்தது. ரேச்சல் கொர்ரி கொதித்தெழுந்தார். புல்டோசருக்கு முன்னால் நின்று தடுத்தார்.

‘நான் இங்கிருக்கும் வரை ஒரு செங்கலைக் கூட உடைக்க அனுமதிக்க மாட்டேன்’ என்றார் கொர்ரி.

‘விலகிப்போ பெண்ணே..! இல்லையேல் ....’

‘இல்லையெனில் என்ன செய்வாய்..?’ கர்ஜித்தார் கொர்ரி.

‘உன் மீது புல்டோசரை ஏற்றி நசுக்கிவிட்டு அந்தக் குடியிருப்புகளை அழிப்போம்’ எனக் குரல் உயர்த்தியது இஸ்ரேல் இராணுவம். எந்த மிரட்டலுக்கும் கொர்ரி அஞ்சவில்லை.

ஈவு இரக்கமற்ற மனித மிருகங்களான இஸ்ரேலிய இராணுவம் புல்டோசரை இயக்கியது. கொர்ரி நகரவில்லை. குடியிருப்புகளை நோக்கி புல்டோசர் முன்னேறியது. கொர்ரி நகர்ந்தார். பின்னோக்கி அல்ல... முன்னோக்கி...! இஸ்ரேலிய மிருகங்கள் கொர்ரியை புல்டோசரால் நசுக்கியது. ஃபலஸ்தீன மண்ணுக்காகத் தன் உயிரையே கொடுத்தார் அந்த இளம் போராளி.

ஃபலஸ்தீன போராட்டத்தில் கொர்ரி ஒரு மைல்கல். இன்னும் ஃபலஸ்தீன மக்கள் கொர்ரியைக் கொண்டாடுகிறார்கள். கொர்ரியின் தியாகத்தைப் போற்றும் வகையில் அவர் நினைவாக அஞ்சல்தலை வெளியிட்டதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு யுத்த






**‘இது ரேச்சல் கொர்ரியின் இரத்தத் திற்கான பழி’. ரேச்சலின் தியாகத்தை ஈரான் ஒரு போர் முழக்கமாக எழுப்பி யிருக்கின்றது. இது வெறும் தாக்குதல் அல்ல. கொள்கைக்கான பழிவாங்கல். நீதிக்கான பெருங்குரல். காலம் கடந்து விட்டாலும் நீதியைப் புதைத்து விட முடியாது.**

களத்திலும் தங்கள் சொந்தச் சகோதரியான கொர்ரியை அவர்கள் நினைக்காமல் இல்லை. கொர்ரியின் வீரத்தை வீதிதோறும், சுவர்கள் தோறும் எழுதி இன்னும் அழியாமல் பார்த்து வருகிறார்கள்.

Rachel, who came to Rafah to stop the tanks. We remember her with love and honour as an inspiration போன்ற வாசகங்களை விளை யாட்டு மைதானங்களிலும் முக்கிய வீதிகளிலும் எழுதினார்கள். ஃபலஸ்தீன இதயங்களில் நிரந் தரமாய் தங்கிவிட்ட போராளியாய் ரேச்சல் திகழ்ந்தாலும் உலகம் இந்தக் கொடுமையைக் கண்டு மௌனித்துக் கிடந்தது. அதுவும் அவர் ஓர் அமெரிக்கப் பெண். அவருக்காக அமெரிக்கா கூட குரல் எழுப்பவில்லை.

காலம் ஓடிவிட்டது. 23 ஆண்டுகள் கடந்துவிட்டன. உலகம் ரேச்சலை மறந்து விட்டது. ஆனால் ஃபலஸ்தீனர்கள் மட்டு மல்ல நீதிக்காகப் போராடுபவர்கள் ரேச்சலை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். ஈரான் ரேச் சலின் தியாகத்தை மறக்கவில்லை. உலகத்தின் உறைந்து கிடந்த மௌனத்தை ஈரான் இன்று தட்டி எழுப்பியிருக்கிறது.

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஈரான் ஒரு பதாகையை ஏந்தியிருந்தது. ‘இது ரேச்சல் கொர்ரியின் இரத்தத்திற்கான பழி’. ரேச்சலின் தியாகத்தை ஈரான் ஒரு போர் முழக்கமாக எழுப்பி யிருக்கின்றது. இது வெறும் தாக்குதல் அல்ல. கொள்கைக்கான பழிவாங்கல். நீதிக்கான பெருங்குரல். காலம் கடந்து விட்டாலும் நீதியைப் புதைத்து விட முடியாது.




புல்டோசர் ஏற்றி ரேச்சலின் உடலை நசுக்கிவிடலாம். அவரின் உயிரைப் பறித்துவிடலாம். ஆனால் ரேச்சலின் குரலை ஒருபோதும் அழிக்க முடியாது என்பதை ஈரான் நீதிக்கான செய்தியாக இன்று அறி வித்திருக்கின்றது. இது வெறும் சண்டையல்ல. நீதிக்கான பழி வாங்கல்.

# கோயில்களை இடித்த ஔரங்கஜேப்?

**- நஸ்ரத் ரோஸி**

**கோயில்களை இடித்த ஔரங்கஜேப் என்பதுடன் மட்டும் வரலாறு படிப்பதை நிறுத்திக் கொள்கிறோம். மேற்கொண்டு 1658 முதல் 1707 வரை செய்த 49 ஆண்டு கால ஆட்சியில் அவர் என்னென்ன செய்தார் என்பதைப் படிக்க மறந்துவிடுகிறோம். தனது வாழ்நாளில் ஒருவர் அரை நூற்றாண்டு காலம் ஒரு மாபெரும் நிலத்தை ஒருங்கிணைத்து ஆட்சி செய்தாரெனில் பெரும்பான்மை இந்துச் சமூகத்தை எதிர்த்துக் கொண்டு எப்படி ஆட்சி செய்திருக்க முடியும்?**



இந்துஸ்தானத்தைக் கைப்பற்றிய முகலாய மன்னர் பாபருடைய ஆறாவது தலைமுறைப் பேரன் ஔரங்கஜேப், கஷ்மீர் முதல் தமிழ்நாட்டின் வட எல்லை வரை வடக்கு தெற்காகவும், ஆப்கானின் காந்தஹார் முதல் அஸ்ஸாம் வரை கிழக்கு மேற்காகவும் பரந்துபட்ட ஒரு பெருநிலத்தை தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்த சூட்சுமங்களைப் பற்றி இவர்கள் படிக்க மறந்து போனது ஏனென்று தான் விளங்கவில்லை.

முற்றிலுமாக தமிழ்நாட்டைக் கைப்பற்றவில்லை எனினும் சென்னைக்கும் ஔரங்கஜேபிற்கும் ஒரு தொடர்பு உள்ளது. சென்னை மைலாப்பூரில் ஔரங்கஜேப்பின் நாணய வார்ப்படம் செயல்பட்டுள்ளது. ஆத்தூர் கோட்டையை சிவாஜியின் மருமகன் ஹிராஜியிடமிருந்து மீட்டு நாயக்கர் வசமே ஔரங்கஜேப் ஒப்படைத்துள்ளார். கி.பி. 1699ஆம் ஆண்டின் கல்வெட்டு ஒன்று சென்னையை அடுத்த குன்றத்தூர் கந்தழீஸ்வரர் சாமி திருக்கோயிலில் ஆலம்கீர் ஔரங்கஜேப் பெயரால் வைக்கப்பட்டுள்ளது.

ஔரங்கஜேப் காசி விசுவநாதர் கோயிலை இடித்தார் என்ற பழியை மீண்டும் மீண்டும் சுமத்தும் யாரும் அவர் செய்த கோயில் திருப்பணிகளைப் பற்றி மூச்சு விடக்கூட யோசிப்பது ஏன்? ஔரங்கஜேப் தனது ஆட்சிக்காலத்தில் தன் நிலப்பரப்பிற்குள் இருந்த கோயில்கள் ஒன்றிரண்டினை இடித்தார் என்பது உண்மை போலவே அவர் பல கோயில்களுக்குப் பணமும் பொருளும் நிலக்கொடைகளும் இராணுவப் பாதுகாப்பும் கொடுத்துள்ளார் என்பதும் உண்மை.

அசாமிலுள்ள காமாக்யா கோயில், மபியின் உஜ்ஜைனியிலுள்ள மகாலேஷ்வர் கோயில் ஆகியவற்றுக்குக் கொடையளித்தவர் ஔரங்கஜேப். மதுராவிலுள்ள தாவ்ஜி மகாராஜ் கோயில் கட்டுவதற்கு 1672இல் பண உதவியும் மேலும் பராமரிப்பிற்கு எட்டு கிராமங்களையும் விட்டுத் தந்துள்ளார். வாரணாசி ஜங்கம்பாடி மடத்தை ஆக்கிர மிப்பிலிருந்து மீட்டுக்கொடுத்த ஔரங்கஜேப் தனது படையில் இருந்து ஆளனுப்பி அதனை பாதுகாக்கச் செய்தார்.

அலகாபாத் சோமேஸ்வரர் கோயிலுக்கு பணமும் நிலமும் வழங்கியுள்ளார். அதற் கருகில் இராணுவப்படை அமைத்திருந்த சமயத்தில் பட்டர்கள் வைத்த கோரிக்கையை நிறைவேற்றினார். கவுஹாத்தி உமாநாத் கோயிலுக்கு மானியங்களை நீட்டித்துத் தர ஃபர்மான் ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளார். 1691இல் கிழக்கு காந்தேஷிலுள்ள ஐந்து கிராமங்களை நேக பட் மகன் ரங்க பட் என்ற பிராமணரது தலைமையில் பிராமணர்களும் முஸ்லிம் ஃபக்கீர்களும் வரியில்லா குடி யிருப்பு கட்டிக்கொண்டு வாழ நிலதானம் வழங்கியுள்ளார்.

1680இல் பனாரசில் இருந்த பிராமண மடாதிபதி பகவத் கொசன், 1687இல் ராம் ஜீவன் கொசன் ஆகியோருக்கு மானியங்கள் கொடுத்து அவர்களது மடங்களுக்குப் பாது காப்பும் கொடுத்துள்ளார். ஆந்திர மாநிலம் சித்திரக் கூடத்திலுள்ள பாலாஜி கோயிலுக்கு 1691இல் வரியில்லாத நிலதானம் வழங்கி யுள்ளார். அதன் பட்டராக இருந்தவர் மஹந்த் பாலக் தாஸ் நிர்வானி. ராஜஸ்தானிலுள்ள அபு மலை ஜைன கோயிலுக்கும், குஜராத் திலுள்ள சத்ருஞ்சயா - கிர்நார் மடங்களுக்கும் மானியத்தையும் நிலங்களையும் கொடை அளித்துள்ளார்.

இவற்றைக் குறித்து கடந்த 1977 ஜூலை 27 அன்று ராஜ்யசபா உறுப்பினர் கேஷர் வனி பாண்டே கூறியதாவது, ‘தாம் முன்னர் அலகாபாத் நகர் பாலிகாவின் நகர்மன்றத் தலைவராக இருந்தபோது அங்கு நிலத்தகராறு ஒன்று வந்தது. அதில் இந்த நிலம் தங்களுக்கு, 1674இல் மகா காலேஷ்வர் கோயிலுக்கு அருகில் ஹனுமன் கோயில் கட்டிக்கொள்ளவும் நாங்கள் குடியிருக்கவுமாக மன்னர் ஔரங்க ஜேப் தந்தது என பிராமணர்கள் வழக்காடி னார்கள், அவர்களிடமிருந்த ஆவணங்களைச் சரிபார்த்த நீதிபதி டி.பி.சப்ரூ உறுதிப்படுத்தி நிலத்தை அவர்களிடம் ஒப்படைத்தார்’. இதனை அலகாபாத் பல்கலைக்கழகப் பேராசிரியர் யோகேஷ்வர் திவாரி தனது ஆய்வுப் புத்தகத் திலும் பதிவாக்கியுள்ளார்.

இந்துஸ்தானில் தங்களது மங்கோலிய, துருக்கிய முஸ்லிம்கள் மன்னர்கள் மட்டுமல்ல இந்துஸ்தானத்திற்குள் இமயம் முதல் குமரி வரை குறுநிலங்களை ஆட்சி செய்தவர்களும், சேர, சோழ, பாண்டியர், பல்லவர் உட்பட வடக்கில் மௌரியம், குஷாணம், குப்தம், ஹர்ஷம், மகதம், கலிங்கம், சாளுக்கியம், சாதவாகனம், மராட்டியம், ரஜபுதனம் என எல்லா அரசுகளும் தங்களுக்குள் அடித்துக் கொண்டும் ஒருவரது கோயில்களை ஒருவர் இடித்துக்கொண்டும் தான் இருந்தனர்.

அவர்களும் இந்துமதம் என்ற ஒரு மதத் திற்குள் ஒருங்கிணைந்தவரல்லர் மாறாக சிலை வழிபாடு, தெய்வச் சடங்குகள், வைதீக வேதங்கள் ஆகியவற்றை மறுத்த சமண, பௌத்த, அஜீவகம் போன்ற சிராமண மதங்களையும் தேவி வழிபாடு, காளி வழிபாடு, வனதேவதைகள் வழிபாடு என பூர்வகுடி, பழங்குடி மரபுகளை ஏற்றவர் களாகவும் வெவ்வேறு சமய நம்பிக்கை களைக் கொண்டவர்களாகத் தான் இருந்தனர்.

ஒரு நிலத்தை ஆட்சி செய்தவர் இன் னொரு நாட்டுக்குப் படையெடுக்கும் போது அவர்களது பெரும் செல்வமான கால்நடை களைக் கவர்வதும், காடுகளைக் கொளுத்து வதும், கோயில்களையும் கோட்டைகளையும் இடிப்பதும், அங்குள்ள பொக்கிஷங்களைச் சூறையாடுவதும், தடுக்க வருவோரைக் கொல்வதுமாகத்தான் போர் செய்வார்கள். அதனை போர் மரபு என்று வேறு கூறிக் கொள்வார்கள்.

இங்குள்ள சோழர்களைக் கடாரம் கொண்டான், கங்கை கொண்டான், மதுரை கொண்டான் என்றும் சேர மன்னரை இமயம் கொண்டான் என்றும் பாண்டிய மன்னரை கொல்லம் கொண்டான் என்றும் பல்லவ மன்னரை வாதாபி கொண்டான் என்றெல்லாம் பட்டப்பெயர் சூட்டி பெருமையுடன் அழைக்கின்றனரே புலவர்கள், இவர்களெல்லாம் எதைக் கொண்டார்கள்?

வாதாபியை இடித்த பல்லவர் அங்கிருந்து விநாயகர் சிலையை இங்கு கொண்டுவந்து நிறுவிய காரணமென்ன? சாளுக்கியரிடமிருந்து கோயிலைக் கொள்ளையடித்த சோழர்கள் துவாரபாலகர், துர்கைச் சிலைகள், சூரிய பீடம் ஆகியவற்றை தாராசுரம் கோயிலில் ஏன் வீற்றிருக்கச் செய்தார்கள்? குலோத்துங்கச் சோழனால் சிதம்பரம் கோயிலிருந்து கோவிந்தராஜ பெருமாள் சிலை ஏன் கடலில் வீசப்பட்டது?பாண்டியருக்கும் சோழருக்கும் நடைபெற்ற போரில் கங்கைகொண்ட சோழபுரம் ஏன் நாசப்படுத்தப்பட்டு எள் விதைக்கப்பட்டது? இலங்கையில் போர் நடத்திய ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன் அங்கிருந்த மணிகட்டி மாளிகையிலிருந்து தங்கத்தாலான புத்தர் சிலையைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்தது பற்றி தெரியுமா?

இஸ்லாமிய மரபில் போருக்கென்றே தனி அறிவுரைகள் உண்டு. அதில் பெண்கள், சிறுவர்கள், முதியோர் ஆகியோர் தாக்கப்படக்கூடாது. பிறமத வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்தக்கூடாது, போருக்குக் கொண்டு வரப்படும் குதிரைகள் உட்பட எந்த கால்நடைகளையும் கொல்லக்கூடாது போன்ற கடுஞ்சட்டங்கள் உண்டு. ஆனால் இந்துஸ்தானத்தில் ஒரே மதத்தின் கீழ் அரசுகள் ஒருபோதும் இயங்கியதில்லை. ஆகவே அவரவருக்கென தனித்தனி மரபுகளைக் கடைப்பிடித்து வந்தனர். அதில் மேலே குறிப்பிட்ட அனைத்தும் நடக்கும்.

இந்துஸ்தானத்திற்குள் நுழைந்த முஸ்லிம் மன்னர்களும் அதையே கடைப்பிடித்தனர். இந்தியா தவிர ஏனைய நிலங்களில் ஆட்சி அமைத்த இஸ்லாமிய அரசுகள் மத்திய கிழக்கிலோ, கீழைத்தேச நாடுகளிலோ போய் பிறமத மக்களுடைய வழிபாட்டுத்தலங்களை இடித்தார்கள் என்ற வரலாற்றை நீங்கள் எங்குமே படிக்க முடியாது.

முஸ்லிம்களை விட்டுவிடலாம், இந்துஸ்தானத்திற்குள்ளாகவே தங்களுக்குள் சண் டையிட்டுக் கொண்ட பிறமத மன்னர்களுக்குள் சமய ஒற்றுமையின்றி சண்டைகள் வந்தபோது அவர்கள் ஏன் கோயில்களை இடித்தனர்? கோயில்கள் என்பன ஒரு மன்னனின் போர் வெற்றிக்கான அடையாளங்களாகத் திகழ்ந்தன. பெரிய அரசு ஒன்றை போரினால் வெற்றிகொண்ட பிறகு அவர்களது புகழைப் பறைசாற்றிக் கொள்ளவும் நடந்த போர் குறித்து வருங்காலத் தலைமுறைக்கு நினைவு படுத்தவும், தங்களது வம்சத்தில் பிறக்கும் குலக்கொழுந்துகளுக்கும் அந்த கோயில்களும், கோட்டைகளும் ஒரு ஞாபகச் சின்னங்களாக நினைவில் நிற்கும் என்பதாக அதனைக் கட்டி வைத்தனர்.

அவர்கள் பிற நிலத்து அரசுகளிடம் கொள்ளையடித்து வரும் பொக்கிஷங்களைக் கோயில் நிலவறைகளில் பூட்டி வைத்தனர். போருக்குப் பயந்து அல்லது போரில் தோற்று உயிரை மட்டுமாவது காப்பாற்றிக் கொள்ள கோயில்களில் ஓடிச் சென்று ஒளிந்து கொள்ளவும் சுரங்கப்பாதை வழியாகத் தப்பிச் செல்லவும் கோயில் மிகப்பெரிய அபயமளிக்கும் இடமாக விளங்கிய காரணத்தால் எந்த மன்னர் எந்த நாட்டைப் பிடித்தாலும் அவர் இடிக்கும் முதல் இடம் கோயிலாக இருந்ததில் வியப்பே இல்லை. இதில் முஸ்லிம் மன்னர்கள் விதிவிலக்குமில்லை. அங்கே இடிக்கப்பட்டது கோயிலும் கோட்டையும் மட்டுமல்ல அந்த நாட்டு மக்களிடம் அவர் ஏற்படுத்தி வைத்திருந்த மதிப்பு, மரியாதை உட்பட அவரது கர்வம் அனைத்தும் அங்கே அழிக்கப்படுகிறது என்னும் விதியும் நிறுவப்படுகிறது என்னும் இக்கருத்தினை முன்வைப்பவர் இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்றாய்வாளர் திரு.ராம் புன்யானி.

ஔரங்கஜேப் அரசவையில் ரஜபுத்திர அமைச்சர்களுக்கு இணையாக பண்டிட் ஜகந்நாதா, ராஜா ரகுநாத் ராய், சந்தர் பானு, ராய் ராயன் ரகுநாத் தாஸ் போன்ற பிராமணர் களே நிர்வாகப் பணிகளில் இருந்தனர். முஸ்லிம்களுக்கு இணையாக மன்சப்தார் எனும் பதவியில் அதிகளவில் இருந்து வளமான வாழ்க்கை வாழ்ந்தனர். அந்தக் காலத்தில் ஔரங்கஜேப் மீது இல்லாத வன்மமும் காழ்ப்பு உணர்வும் இவர்களுக்கு இப்போது ஏன் தலைவிரித்தாடுகிறது? ஔரங் கஜேப் குறித்து முதன் முதலில் புத்தகம் ஒன்றை எழுதியவர் வெனீஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு போலி மருத்துவரான நிக்கோலோ மனூச்சி என்பவராவார்.

இவர் 14ஆம் வயதில் வெனீஸ் நகரை விட்டு ஓடிவந்து முகலாய இந்தியாவில் வேலை தேடிக்கொண்டிருந்தார். தாரா ஷிகோ விடம் படையில் சேர்ந்தவர் ஔரங்கஜேப் - தாரா ஷிகோ இடையே நடந்த அதிகாரப் போட்டியில் ஷிகோ மரணித்துவிட ஔரங் கஜேப் மகன் ஷா ஆலமுடன் நட்பு ஏற்படுத்திக்கொண்டு தன்னை மருத்துவரென அறிமுகப்படுத்திக் கொண்டார். இதனால் அரசகுலத்தவருக்கு வைத்தியம் செய்யும் செல்வாக்கில் அந்தப்புரம் வரை அவருக்குச் செல்ல முடிந்தது.

போர்த்துகீசியர்களை முகலாய அவைக்கு அழைத்துவந்து அவர்களை வியாபாரிகளாக அறிமுகப்படுத்தியது முதல் போர்த்துகீசி யருடன் இணைந்து சதித்திட்டம் போட்டது வரை பின்னாளில் அம்பலமானவுடன் அங்கிருந்து தப்பித்து மதராஸிற்கு வந்து பிரிட்டிஷாரிடம் தஞ்சம் புகுந்தார். இங்கே இருந்துகொண்டு முகலாய அரசவையைப் பற்றிய ஆவணப்புத்தகம் எழுதுகிறேன் என்ற பெயரில் Storia do Mogor என புத்தகம் முதன்முதலில் ஔரங்கஜேபைக் கொடுங் கோலன் என்று சித்திரித்தார். ஔரங்கஜேப் குறித்து எழுதப்பட்ட முதல் நூலாக இது கருதப்படுகிறது. இதனை முன்வைத்தே ஆங்கிலேயர்களும் ஔரங்கஜேபைக் கடுமை யான மனிதரென கதை கட்ட ஆரம்பித்தனர். அவர்கள் எழுதிவைத்த வன்ம வக்கிரங்களை வைத்துக்கொண்டே இன்றுள்ளவர்கள் பரப் பிக் கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் ஔரங்கஜேபை இந்துக் களோ, பிராமணர்களோ வெறுக்கவில்லை, உடன் வாழ்ந்த முஸ்லிம்கள் தான் வெறுத் தனர். ஆடம்பரங்களை வெறுத்து, சுல் தானாக இருந்தாலும் சொந்த உழைப்பில் எளிமையாய் வாழ்ந்த் ஔரங்கஜேப் தர்கா வழிபாடுகளையும் உரூஸ் நடத்துவதையும் தர்காக்களில் கவ்வாலி இசைக் கச்சேரி நடத்தி பாடல் பாடுவதையும் பெண்கள் தர்காக் களுக்குப் போவதையும் தடுத்து ஃபத்வா இ ஆலம்கீர் என்ற பெயரில் ஃபர்மான் இயற்றி னார்.

ஔரங்கஜேப் இசைக் கச்சேரிகளைத் தடுத்தார் என்பதற்காக வாத்தியங்களைப் பிணம் போல சுமந்து சென்று அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள், ‘இசை இறந்துவிட்டது’ என்றார்கள். அதைக் கேட்ட ஔரங்கஜேப், ‘மீண்டும் எழுந்து வந்துவிடாதபடி ஆழமாகப் புதைத்து விடுங்கள்’ என்று கூறினார். வரலாறு இப்படியிருக்க இன்று வேறு மாதிரி திரித்துக் கூறப்பட்டு வருகிறது.

அரசர்கள் என்று வந்துவிட்டால் அவர்கள் அனைவரையும் அரவணைத்து ஆட்சி செய்ய வேண்டியவர் என்பதால் யாரும் யாரையும் பகைத்துக் கொள்ள மாட் டார்கள். ஆனால் அதையும் தாண்டி அரசியல் காரணங்களுக்காகப் பகையும் விரோதமும் உருவாகியே தீரும் என்கிற காரணங்களை மனதில் நிறுத்தி வரலாற்றைப் படிக்கும் எந்தவொரு வரலாற்றாசிரியரும் வரலாற் றாய்வாளரும் இந்த நாட்டுச் சரித்திரத்தில் இந்த மன்னர் தான் நல்லவர் என்று அவரைப் போற்றிப் புகழவோ அல்லது இவர் கெட்டவர் என தூற்றி இகழவோ மாட் டார்கள். வரலாற்றில் தங்களுக்குத் தேவை யானதை மட்டும் சமரசம் செய்து கொண்டு மற்றவருக்குத் தீயவர் பட்டம் கட்டுவோர் கபடவேடம் தரிப்போர் என்று உணர வேண்டும்.

# எங்க ஊரு ஆட்டோவில் சிங்கப்பூருக்கு

- ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

அந்த அமர்க்களமான, நவநாகரிக போட்டோ ஸ்டூடியோவுக்குள்ளே பிரவேசித்தபோது பிரமிப்பாயிருந்தது.

சென்னை ஷெனாய் நகரிலிருக்கிற சாரதா ஸ்டூடியோ தான் இவனுடைய பதிவான புகைப்பட நிலையம். அந்த ஸ்டூடியோவின் உரிமையாளர் பாலாஜி தான் கேமராவில் படம் பிடிப்பார். அடுத்த நாள் வந்து புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளச் சொல்லுவார்.

ஷெனாய் நகரிலும் அண்ணா நகரிலும் அட்டகாசமாய் இவன் டிபாட்மெண்ட் ஸ்டோர் வைத்திருந்தபோது, கிறிஸ்துமஸ் திருவிழாவுக்கு இவனுடைய கடைக்கு கிறிஸ்துமஸ் தாத்தா வடதுருவத்திலிருந்து வந்து விஜயம் செய்வார். குழந்தைகளின் படையெடுப்பால் கடை ஹவுஸ் ஃபுல்லாயிருக்கும். கேமராவைத் தூக்கிக்கொண்டு பாலாஜி வருவார். அது அஞ்சு நாள் அமர்க்களம். அஞ்சு நாளும் கிறிஸ்துமஸ் தாத்தாவோடு பிள்ளைகளைப் படமெடுப்பார் பாலாஜி.

செல்ஃபோனில் படமெடுத்துக்கொள்கிற கலாச்சாரம், செல்ஃபியெடுக்கிற சமாச்சாரமெல்லாம் எட்டியே பார்த்திராத பழங்காலம் அது.

• • •

இப்போது கொழும்பு காலி வீதியில் அந்த அமர்க்களமான, நவநாகரிக ஃபோட்டோ ஸ்டூயோவுக்குள்ளே பிரவேசித்த போது பிரமிப்பாயிருந்தது. வெளி வரவேற்பறையையடுத்த அறையில் கண்ணாடித் தடுப்புக்கு அப்பால் கம்ப்யூட்டர்களை இயக்கியபடி ஆறு பேர் அமர்ந்திருந்தார்கள்.

இவனைப் புன்னகையோடு வரவேற்ற ரிஸப்ஷனிஸ்டிடம் பதிலுக்குப் புன்னகைத்து விட்டு, 'பாஸ்போர்ட் ஸைஸ் போட்டோ எடுக்கணும்' என்றான்.

ஒளிவுமறைவில்லாமல் அவளிடம் தமிழில் கதைத்ததன் மூலம், தான் சிங்களவனில்லை, தமிழன் என்று அவளுக்கு உணர்த்திவிட்டதில் ஒரு திருப்தி.

புன்னகையைத் தணித்துவிட்டு அவள், 'பாஸ்போர்ட்டுக்கா விசாவுக்கா சேர்?' என்று வினவியபோது, இது என்ன அனாவசியமான கேள்வி என்று இவனும் புன்னகையை அணைத்து விட்டான்.

'பாஸ்போர்ட்டுக்குன்னா என்ன, விசாவுக்குன்னா என்ன மேடம் ? ரெண்டும் ஒரே ஃபோட்டோ தானே?'

'இல்ல சேர், ரெண்டும் வேற வேற'

'அப்டியா? எனக்கு, விசாவுக்கு'

'எந்தக் கன்ட்ரி விசா சேர்?'

'எந்தக் கன்ட்ரின்னா என்னம்மா?'

'நாட்டுக்கு நாடு விசா போட்டோ வித்யாசப்படும் சார்'

நாட்டுக்கு நாடு போட்டோ வித்யாசப் படுமாமே? இதையெல்லாம் அறிந்து கொள்ளாமலிருக்கிற பாமரனாயிருக்கிறோமே என்று வெட்கமாயிருந்தது இவனுக்கு.

அந்தப் பெண் இந்த விவரத்தைச் சொல்லாமலிருந்திருந்தால், இவன் பந்தாவாய் 'அமெரிக்கா' என்று ஒரு புளுகு விட்டாலும் விட்டிருப்பான்.

இப்போது பணிவாய் உண்மை உரைத்தான்.

'சிங்கப்பூர்'

புகைப்படமெடுக்கக் கட்டணம் ஆயிரம் ரூபாய் என்றாள்.

'அல்லா, ஆயிரம் ரூபாயா!'

சிலோன் சல்லிக்கு ஆயிரம் ரூபாய் என்றால் இந்தியக் காசுக்கு முன்னூறு.

சாரதா ஸ்டூடியோவில் அதிகபட்சம் ஐம்பது ரூபாய் எடுப்பார்கள்.

ஆயிரம் ரூபாய் எடுக்கிற இந்தக் கொழும்பு ஸ்டுடியோவில், புகைப்படக் கலைஞர், 'சேர், தலைமுடி நெத்திமேலே விழக்கூடாது, கண்ண நல்லாத் தொறங்க, நிமிந்து ஒக்காருங்க, மொகத்த லேசா இடது பக்கம் திருப்புங்க' என்று இயக்குநர் வேலை பார்த்தபோது, 'தம்பி, நா சினிமால நடிக்கப் போகல, சிங்கப்பூருக்குத்தான் போறேன்' என்று சிரித்தான் இவன்.

• • •

சிங்கப்பூர்!

சிங்கப்பூர் என்கிற பெயரில் 1960 இல் ஹிந்தியில் திரைப்படமென்று வெளி வந்தது. கதாநாயகி நம்ம ஊரு பத்மினி!

ஜீவன்மே ஏக் பார் ஆனா சிங்கப்பூர் என்று இனிமையான பாடலொன்று அந்தப் படத்தில் உண்டு.

வாழ்நாளில் ஒரு முறையாவது வர வேண்டும் சிங்கப்பூர். இவன் ஏற்கனவே ஒரு முறை போயிருக்கிறான், இவனுடைய மச்சினனுடைய அனுசரணையில்.

'அல்லா, எத்தனை தசாப்தங்கள் ஓடிப் போய் விட்டன!'

அப்போது, இவனுடைய செல்ல மகனுக்கு வயது ரெண்டு.

டாடியைப் போக விட மாட்டேன் என்று அழுது கொண்டிருந்த குழந்தையை ஏமாற்றி விட்டு இவன் விமானமேறினான். அந்த ரெண்டு வயசுக் குழந்தை, இப்போது சிங்கப்பூரில் ஓர் இஞ்ஜினியர்!



மகனுடைய அனுசரணையில் தான் இப்போது சிங்கப் பூர் பயணம். டிக்கட், விசா, சிங்கப்பூரில் தங்கல், எல்லாச் செலவுகளும் மகனுடைய உபயம். பாஸ்போர்ட் நகலையும் விசா புகைப்படத்தையும் இமெயிலில் அனுப்புவது மட்டும்தான் இவனுடைய பங்களிப்பு.

• • •

அன்றைக்கு சிங்கப்பூரில் போன இடங்கள், பார்த்த சுற்றுலாத் தலங்களெல்லாம் இவனுக்கு நினைவில் இருக்கின்றன ஸெந்த்தோசாத் தீவுக்கு, பூமிப்பரப்புக்கு மேலாய்க் கயிற்றுக் காரில் போனது நினைவிருக்கிறது. டைகர் பாம் தோட்டம், செரங்கூன் தெரு, கோமள விலாஸ் உணவகம்..

ஃபிஷ் ஹெட் கறி டெலிக்கஸி என்று அறியப்படுகிற மீன் தலை மசாலாவை மிஸ் பண்ணிவிடவே கூடாது.

• • •

போட்டோ ஸெஷன் முடிந்து வீட்டுக்குத் திரும்புகிறபோது, ஒரு கிலோ மீட்டர் நடக்க வேண்டுமே, ஜாலியாய் ஓர் ஆட்டோ அமர்த்திக் கொண்டாலென்ன என்றொரு சபலந்தட்டியது இவனுக்கு.

ஸ்டூடியோவில் கொடுத்த ஆயிரம் போக, சட்டைப் பொக்கெட்டுக்குள்ளே, நூறுகளும் ஐம்பதுகளுமாய் ஓர் ஐநூறு ரூபாய் கிடந்தது. இந்த ஐநூறு ரூபாயில் ஒரு நூற்றைம்பது, இருநூறை ஆட்டோவுக்கு வாரி வழங்கவா? வேண்டவே வேண்டாம். பாதயாத்திரையாகவே போகலாம். சிங்கப்பூரில் சுவைக்கப் போகிற ஃபிஷ் ஹெட் கறி டெலிக்கஸியை நினைத்து, சப்புக்கொட்டிக் கொண்டே நடந்தால், ஒரு கிலோ மீட்டர் தூரம், நூறு மீட்டராய்க் குறுகிப் போகும்!

ஃபிஷ் ஹெட் கறி டெலிக்கஸியை நினைத்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தபோது, ஆட்டோ ஒன்று இவனை உரசிக்கொண்டு வந்து தரித்து நின்றது.

'தொர, ஆட்டோ தொர?' என்று, ஆட்டோ சாரதி இவனை உசுப்பேத்தி விட்டபோது, வெயிலாயிருக்கிறதே, பொக்கெட்டிலும் ஓர் ஐநூறு ருபாய் போல கிடக்கிறதே, ஆட்டோ சாரதியும் அன்போடு அழைக்கிறாரே, ஆட்டோவில் ஏறிக்கொண்டாலென்ன என்று சபலம் மேவிட, ஆட்டோவை சமீபித்து, ஒரு காலையெடுத்து ஆட்டோவுக்குள்ளே பதிக்கப்போன தருணத்தில், இவனைத் தடுத்தாட்கொண்ட மாதிரி, 'மாலூ, மாலூ' என்றொரு குரல், வியர்வையில் நனைந்த குரல், இவனை முந்திக்கொண்டு சென்றது.

சிங்களத்தில், மாலு என்றால் மீன்.

நீளமான மூங்கில் கொம்பின் இரு முனைகளிலும் பிரம்மாண்டமான ரெண்டு மீன் கூடைகள். அந்த மூங்கில் கொம்பைத் தோளில் சுமந்தபடி, மீன் கூடைகளை பாலன்ஸ் செய்தபடி அந்த மீன் வியாபாரி வேர்க்க விறுவிறுக்க மாலூ, மாலூ என்று கூவியபடி துரித நடை பயின்று கொண்டிருந்ததைப் பார்த்தபோது இவனுக்கு இவனுடைய ஃபிஷ் ஹெட் கறி டெலிக்கஸி கனவெல்லாம் காலாவதியாகி விட்டது. ஆட்டோ சபலமும் அடங்கி விட்டது.

ஆட்டோவுக்குள்ளே பதிக்கப்போன வலது பாதத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு, ஒரு தொங்கோட்டத்தில் போய் அந்தத் தொழிலாளியை வழி மறித்தான்.

'ஐயா, இந்த சொமையக் கொஞ்சம் எறக்கி வைங்க. ஒங்களுக்குத் தமிழ் தெரியுமா?'

ஆட்டோவை சமீபித்து, ஒரு காலையெடுத்து ஆட்டோவுக்குள்ளே பதிக்கப் போன தருணத்தில், இவனைத் தடுத்தாட்கொண்ட மாதிரி, 'மாலூ, மாலூ' என்றொரு குரல், வியர்வையில் நனைந்த குரல், இவனை முந்திக்கொண்டு சென்றது.

‘தெரியும் தொர. நா சிங்களவன்தான், ஆனா, தமிழும் தெரியும். எந்த மீன் வேணும் தொர? மீன் தல கூட இருக்கு தொர.’

‘ஒங்க ஒழைப்பைப் பாக்குறபோது எனக்கு மீன் தல ஆசையெல்லாம் அடங்கிப் போச்சு ஐயா. நீங்க எவ்வளவு நேரமா இந்த வெய்ட்டச் சொமந்துக்கிட்டு இந்த வேகாத வெயில்ல இப்டி அலஞ்சிட்டிருக்கீங்க?’

‘அலச்சலுக்கு அஞ்சினா வயிறு நெறையுமா தொர? என்ன நம்பி வூட்ல அஞ்சி வயிறு இருக்கு. காலைலயிருந்து ஒரு ரெண்டு மணித்தியாலமா அலையறேன். இன்னும் ஒரு நாலு மணித்தியாலம் அலஞ்சாத்தான் இந்த ரெண்டு கூடையும் காலியாகும். சரி, ஒங்களுக்கு என்ன மீன் தொர?’

‘எனக்கு மீன் எல்லாம் வேண்டாம் ஐயா, இந்த ஐநூறு ரூவாயாப் புடிங்க.’

‘ஐநூறு ரூவாயா! எதுக்கு தொர?’

‘ஒங்களோட ஒழைப்புக்கு என்னோட சின்ன அன்பளிப்பு. ஒரு ஆயிரம் ரூவா வச்சிருந்தேன், செலவாயிருச்சி. இல்லாட்டி அதையும் சேத்து ஒங்க கைல குடுத்திருப்பேன். இந்தாங்க, இந்த ஐநூறப் புடிங்க.’

‘ரொம்ப நன்றிங்க தொர. நீங்க நல்லாயிருக்கணும் தொர!’

‘ஒங்க ஆசீர்வாதம் ஐயா, ஒங்க கைய இப்டிக் குடுங்க.’

‘ஐயே, அழுக்குக் கை தொர.’

‘‘உழைப்பாளி கை அழுக்காத்தான் இருக்கும், பரவாயில்ல, கையக் குடுங்க.’

அந்த உழைப்பாளியுடைய கைகளைப் பற்றிக் குலுக்கி, அய்போவன் என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தான்.

‘மாலூ மாலூ....’

அந்தக் குரல் போகிற திசையையே பார்த்துக்கொண்டு நின்றபோது, ஆட்டோ ஒன்று இவனை உரசிக்கொண்டு வந்து தரித்து நின்றது.

அதே ஆட்டோ.

‘தொர, ஏறுங்க.’

‘வேண்டாம் சார், ஆட்டோவுக்கெல்லாம் இப்ப எங்கிட்டக் காசு இல்ல.’

‘நா ஒங்கட்ட சல்லி கேக்கலியே தொர. நீங்க ஒரு சதம் கூடக் குடுக்க வேண்டாம். நா எல்லாத்தையும் பாத்துக்கொண்டு, கேட்டுக்கொண்டுதான் நிண்டன் தொர. நீங்க ஒரு புண்ணிய மனிசன். எண்ட ஆட்டோவுல நீங்க ஏறினீங்களெண்டா, ஒங்க புண்ணியத்துல எனக்கும் ஒரு சின்னப் பங்கு கெடைக்கும். ப்ளீஸ் ஏறுங்க தொர.’


**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**

138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.

மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# வழிகாட்டுதல்களும் புறக்கணிப்பும்

● K.M. முஹம்மது

அன்பு
பாசம்
நேசம்
நட்பு
கருணை
இரக்கம்
சகோதரத்துவம்
இணக்கம் என
அனைத்தும் கலந்த கலவையாய்
மானுடத்தை
அழகாய்ப் படைத்தான்
மகத்தான இறைவன்

ஒழுக்கம்
நேர்மை
உண்மை
வாய்மை
நீதி எனும் அமைதிப் பாதை
அமைத்துத் தந்தான்
மானுடம் வாழ

அந்த ஓர் இறையின்
மேலாண்மையை நிராகரித்து
இறை வேதமும் தூதரும்
இயம்பிய பாதையைப் புறக்கணித்து

அகந்தை
ஆணவம்
பேராசை
பெண்ணாசை
காமம்
வக்கிரம்
வஞ்சகம்
சூழ்ச்சி
துரோகம் எனும்
சாத்தானின் தோழனாய்
மாறிய மனிதன்

சாதி
இன
மதவெறி
மோசடி
சுரண்டல்
இலஞ்சம்
ஊழல்
பொய்
பித்தலாட்டம்
போலி ஆன்மிகம்
போதை மது
வன்புணர்வு
கொலை கொள்ளை எனும்
கொடும் பாவ இருளில்
அகம்பாவத்தில் மூழ்கி

ஆதிக்கம்
எதேச்சதிகாரம்
அணு ஆயுதம்
பயங்கரவாதம்
வன்முறை
போர் என
அறநெறி வாழ்வைச் சீர்குலைத்து
பூமியை பேரழிவில் தள்ளி விட்டான்

காத்திருக்கிறது
நிரந்தர நரகம்
இந்த மனித உரு சாத்தான்களுக்கு

திறந்திருக்கிறது
சுவன வாசல்
இறைவன் படைத்த நல்
இயல்போடு வாழ்ந்த
ஆன்மாக்களுக்கு



# சமரசம் புதிர் போட்டி 9

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 மே 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. 'ஹஜ்(ஜுடைய காலம் அனைவராலும்) அறியப் பட்ட சில மாதங்களாகும். எனவே இம்மாதங்களில் எவரேனும் ஹஜ் கடமையை நிறைவேற்ற நாடினால், ஹஜ்ஜின்போது இச்சைகளைத் தூண்டக் கூடிய சொல், செயல் மற்றும் தீவினை, சண்டை சச்சரவு ஆகியவற்றில் ஈடுபடக் கூடாது. மேலும், நீங்கள் ஏதேனும் நன்மை செய்தால் அதனை அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கின்றான். மேலும், நீங்கள் (ஹஜ்ஜுக்காக) வழித் துணைச் சாதனங்களைக் கொண்டு செல்லுங்கள். உண்மை யாதெனில், வழித் துணைச் சாதனங்களில் எல்லாம் மிக மேலானது இறையச்சம்தான். எனவே நல்லறிவுடையோரே! எனக்கு மாறு செய்யும் போக்கிலிருந்து விலகி வாழுங்கள்' இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆனின் அத்தியாயம்

   (அ) அல்பகறா (ஆ) அல்ஹஜ்

2. 'இறைவனை நினைவு கூராமல் வெற்றுப் பேச்சில் ஈடுபடுவது இதயத்தை இறுகச் செய்து விடும்' என்ற நபிமொழியின் அறிவிப்பாளர்

   (அ) இப்னு உமர்(ரலி) (ஆ) இப்னு மஸ்ஊத்(ரலி)

3. வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று மாறாக --- உண்மையான செல்வமாகும்

   (அ) நன்றி செலுத்தும் உள்ளம்
   (ஆ) போதுமென்ற மனம்

4. போர் என்ற நூலில் அமெரிக்க அரசிற்கு 18 பரிந்துரைகளை வழங்கிய பொருளாதார அறிஞர்களில் ஒருவர்

   (அ) மிர்தல் (ஆ) ஸ்டிக்லிஸ்

5. திமுக தலைமையிலான கூட்டணி

   (அ) தேசிய ஜனநாயகக் கூட்டணி
   (ஆ) மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

6. இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து என்று கூறியவர்

   (அ) தந்தை பெரியார் (ஆ) அறிஞர் அண்ணா

7. 'வெறுப்பு அரசியல் – வெறுப்பு மறைய, பாசம் மலர' நூலின் ஆசிரியர்

   (அ) டாக்டர் முஹையுத்தீன்
   (ஆ) டாக்டர் K.V.S.ஹபீப் முஹம்மத்

8. 'எல்லாமே எங்களுக்குச் சாதகமாக இருந்தன. ஆனால் இறைவன் கொமேனியின் பக்கம் இருந்தார்' என்று கூறியவர்

   (அ) ட்ரம்ப் (ஆ) ஜிம்மி கார்ட்டர்

## புதிர் போட்டி ஏழுக்கான விடைகள்

1.(ஆ) ஆலு இம்ரான் 2.(ஆ) நபி ஸுலைமான் (அலை) 3.(அ) ஆமீலின்அலல் ஹமாஅ 4.(அ) தார்மிக் ஜன்மோர்சா 5.(ஆ) இஸ்லாமிய புரட்சிகர காவலர்படை(IRGC) 6.(அ) ஞானேஷ் குமார் 7.(அ) தீக்கோழி 8.(ஆ) செ.திவான் 9.(ஆ) ஆலமரம் 10.(அ) ஹார்முஸ் நீர் வழிப்பாதை

### சரியான விடையை எழுதியவர்கள்:

1.ஷே.மஹ்ரூக், காரைக்கால் 2. ஜா.ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 3. ந.அனிபா, நாமக்கல் 4. P.A.சமீஹா, கடையநல்லூர் 5. முஹம்மது உவைஸ், ஏர்வாடி 6. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 7. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 8. குர்சித் பர்ஹானா, திட்டச்சேரி 9. ரய்யான் முஹம்மத், கடையநல்லூர் 10. பாலா ஆமினத், சிக்கல் 11. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 12. முஹம்மது வசிம், வளநாடு 13.முஹம்மது பெரோஸ்கான், நெல்லிக்குப்பம் 14. H. ஷாகுல், திட்டக்குடி 15. மு.இஸ்ரத் ரைஹானா, குளச்சல் 16. P.P. யூசூஃப் ஹஸன், கடையநல்லூர்

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்

# அக்கரைப் பச்சை 37

● ஜரினா ஜமால்

சாலிஹா ஹதீஸின் விளக்கத்தை மச்சி மகள்களிடம் கூறினாள். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யாராவது காப்பாற்ற மாட்டார்களா?' என்ற எண்ணத்தில் நீரில் மூழ்கியவன் தத்தளிப்பது போல் கப்ரில் ஒரு மைய்யித் தனது தந்தை, தாய், சகோதரன், நண்பர்கள், பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோரிடமிருந்து துஆவை (பிராத்தனையை) எதிர்பார்க்கின்றது. அப்படி யாரேனும் செய்த ஒரு துஆ அந்த மைய்யித்தைச் சென்றடைந்தால், அதை உலகம் அதிலுள்ளவற்றை விட மிகப் பிரியமாக நினைக்கின்றது.

நிச்சயமாக அல்லாஹ் உலக மக்களின் பிரார்த்தனை மூலம் கப்ருவாசிகளுக்கு மலைகள் போன்று அருள்களைப் பொழிகின்றான். இறந்தவர்களுக்காகப் பாவ மன்னிப்புக் கேட்பது உயிரோடிருப்பவர்கள் மரணித்தவர்களுக்கு வழங்குகின்ற அன்பளிப்பாகும்' (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) பைஹகி, ஹதீஸ் 7904, மிஷ்காத், ஹதீஸ் 2355).

சொந்தங்கள் எல்லாம் வந்து பார்த்துப் போனார்கள். 'சாலியா அல்லாஹ், உனக்கு மச்சி மூலம் ஒரு வழிகாட்டி விட்டான். நல்ல வாழ்க்கை வாழ அல்லாஹ்விடம் துஆச் செய்கிறோம்' என்று கூறினர். எவ்வளவு உற்சாகத்துடன் ஊருக்கு வந்தாளோ அத்தனையும் வடிந்து, முகத்தில் களை இழந்து திரிந்தாள் சாலிஹா.

வயதான, வெளியில் எங்கும் போக வர முடியாத குடும்பத்துச் சொந்தங்களைப் பார்த்து வந்தாள். யாருக்கெல்லாம் பணம் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் கொடுத்தாள். இது ஆண்டு தோறும் நடப்பது தான். மச்சி மூலமாகக் கொடுக்கச் சொல்வாள். இம்முறை தானே நேரில் சென்று சந்தித்தாள். வீடுகளில் வயோதிகத்திலும், வியாதியிலும், தனிமையிலும் மூழ்கிக் கிடக்கும் அவர்களுக்குத் தான் எவ்வளவு மகிழ்ச்சி.

உலகில் இப்படிப்பட்டவர்கள் எவ்வளவு பேர் அலட்சியப்படுத்தப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சுவனத்தை அடைந்தது போல் மகிழ்ச்சி கிடைக்கிறது. மாலை மயங்கும் வேளையில் அலைப்பேசி அலறியது. எடுத்துப் பார்த்தாள். புது நம்பர். கட் பண்ணினாள் மீண்டும் அடித்தது. எடுத்தாள்.

'ஹலோ'

'நான் பரிதா பேசுறேன். சாலிஹா! நல்லா இருக்கீங்களா? '

கொஞ்சம் விரைப்பானாள்.

'நல்லா இருக்கேன் மேடம்'

'இன்னைக்கு சைதா மேடம் வீட்டில் மீட்டிங். எல்லா சிஸ்டரும் வந்திருக்கிறோம். உங்க ஹெல்ப்புக்கு பலரையும் இன்டர்வியூ பண்ணினோம். யாரும் உங்க அளவுக்குச் சூட் ஆக மாட்டேங்குறாங்க'

'என்ன பேசுறீங்க மேடம்? எனக்கு எதற்கு ஹெல்ப்? என்ன ஹெல்ப்?'

'நீங்க பிள்ளைகளுடன் தனியாகக் கஷ்டப்படுறீங்க.. அதற்குத்தான்'

நான் மீண்டும் வருவேன் என்று முடிவே பண்ணி விட்டார்களா.. இவர்களுக்கு நான் என்ன அடிமையா?

'மேடம் இங்கே எனக்கு ஊரில் நிறைய வேலை இருக்கு. இங்கே எங்கள் மாமனாருடைய லேண்ட், ஃபார்ம்ஸ், எல்லாம் உள்ளது. என் ஹஸ்பண்ட் உடைய சிஸ்டர் அவங்க குழந்தைகள் எல்லாம் இருக்காங்க. ப்ராப்பர்டி பிரித்து எழுதிக் கொடுக்கணும்'

'மாஷா அல்லாஹ்.. மாஷா அல்லாஹ்..!

எல்லாம் முடிச்சுட்டு வாங்க. அதுக்குள்ள பிள்ளைகளும் வந்துருவாங்க'

'நீங்க வேற யாரையாவது செலக்ட் பண்ணுங்க மேடம்'

காதில் வாங்காதது போல் பரிதா மேடம் கழன்று கொண்டாள்.

'இதோ சைதா மேடம் பேசுறாங்க பேசுங்க சாலிஹா'

ஐயோ மேடம்.. என்று யோசிக்கும் போதே அந்தப் பக்கம் 'ஹலோ சாலிஹா' என்ற குரல் கேட்டது.

'சொல்லுங்க மேடம்'

'பாத்தியா? என்னை மேடம் என்று சொல்லும்போதே என் நம்பிக்கையை அதிகப்படுத்துகிறாய்'

'என்ன நம்பிக்கை மேடம்?'

காதில் வாங்காமல் பேசினாள். 'சாலிஹா டிக்கெட் இப்போ ரிசர்வ் பண்ணினால் தான் நல்லது. சம்மர் வெக்கேஷன். மதுரையில் இருந்து தானே புக் பண்ண வேண்டும்?'

'நீங்களாக முடிவு பண்ணாதீங்க மேடம்.. எங்கள் வீட்டில் சென்னைக்கு அனுப்ப விருப்பப்படவில்லை'

'ஆனால் போன் போடும்போதெல்லாம் பிள்ளைகள் உங்களைத்தானே விசாரிக் கிறார்கள். உங்களைத்தானே விரும்பு கிறார்கள். நீங்கள் தான் வேண்டும் என் கிறார்கள். இதற்குக் காரணமும் நீங்கள்தான் சாலிஹா. அவர்களை அப்படி நீங்கள் சில ஆண்டுகளாக மெஸ்மரிசம் பண்ணி விட்டீர்கள்'

ஆங்கிலமும் தமிழும் கலந்து உரை யாடினாள். மெதுவான குரலில் கூறினாள், 'மேடம் எனக்குத் திருமணப் பேச்சு நடக் கிறது'

'வாவ்! எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி. திருமணம் முடித்து அவரையும் கூட்டிக்கொண்டு இங்கே வந்து விடுங்கள். நமக்கும் இன்னும் ஆட்கள் தேவையாகத் தானே உள்ளது. கம் சூன் வெல்கம் டு சென்னை. நன்றாக யோசித்து எனக்கு போன் போடுங்கள். டிக்கெட் போட வேண்டும் தேதியை சொல்லுங்கள்'

கட் பண்ணி விட்டாள்.

சாலிஹா தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். ஃபாத் திமா அருகில் வந்தாள்.

'நல்ல பதில் சொன்னீங்க மச்சி..'

'மச்சி நான் எந்த அர்த்தத்திலயும் சொல் லலை. தயவு செஞ்சு என்னைக் கொஞ்சம் நிம்மதியாக இருக்க விடுங்க..'

வாசலில் பேச்சுச் சத்தம் கேட்டது. யாரோ வருகிறார்கள். வரவேற்று அமர வைத்தார்கள். யாரென்று தெரியாமல் சாலிஹாவும் அமர்ந்தாள். வந்தவர்கள் சாலிஹாவிடம் சரளமாகப் பேசினார்கள். தன்னைப் பெண் பார்க்க வந்துள்ளார்கள் என்பதே மிகவும் வெட்கமாக இருந்தது.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சி சாலிஹாவின் இயல்பு நிலையை மாற்றியது. யாரிடமும் சரியாகப் பேச முடியவில்லை. யாரைக் குற்றம் சொல்ல? யாரிடம் தன் உணர்வை வெளிப்படுத்த? ஒன்றும் புரியாமல் தவித்தாள். இதற்கான முடிவென்ன? மதரஸா நடத்த வேண்டும். தான் கற்ற கல்வியை மற்றவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். பாவப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். இதுதானே தன் எண் ணம். இதைத்தானே சல்மானும் விரும்பி னான். இந்த வயதில் திருமணம்

**'இஷ்டமில்லா வாழ்க்கை நஷ்டத்தில் முடியும். நீங்கள் எவ்வளவு கேட்டாலும் அந்நிய ஆணை நான் சல்மான் என்று அழைக்க முடியாது புரிந்து கொள்ளுங்கள்.**

என்ற பந்தத்தில் நுழைந்து.. ஊஹும் என்னால் முடியாது. இஸ்லாம் அனுமதி வழங்கினாலும் தன்னை இன்னொரு ஆணுடன் சேர்த்துப் பார்க்க இஷ்ட மில்லை. எப்படியாவது என் எதிர்ப்பைத் தெரிவித்தே ஆக வேண்டும். என் முடிவைச் சொல்லியே ஆக வேண்டும். வாங்கி வைத்திருந்த இனிப்பு, காரங்களை எல்லாம் ஃபாத்திமா எடுத்து வைத்தாள். பிள்ளைகள் சொம்பில் தண்ணீரும் கண் ணாடி கிளாஸ்களும் கொண்டு வந்து வைத்தனர். வெற்றிலைச் செல்லத்தை (வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு வைக்கும் சிறிய பித்தளைப் பெட்டி) கொண்டு வந்து பாயின் நடுவில் வைத்தார்கள்.

'சாலிஹா ஏதாவது பேசுமா! இவ் வளவு அமைதியாக இருக்க. என்ன சிந்தனையோ?'

'ஒன்னுமில்லை பெரியம்மா! ஊருக்குப் போக வேண்டும். பொருள் கொஞ்சம் வாங்க வேண்டும். அதைப்பற்றி யோசித் துக் கொண்டிருந்தேன்'

'ஊருக்கா.. எந்த ஊருக்குமா?'

'மதுரைக்கு, மெட்ராஸுக்கு...!'

'மதராசுக்கு இனி எதற்குப் போக வேண்டுமா?'

'இல்லை பெரியம்மா! என்னை நம்பி ஒரு ஹோமும், பிள்ளைகளும் இருக்கி றார்கள். நான் போகவில்லை என்றால் பிள்ளைகள் ஏங்கி விடுவார்கள்'

வாயில் வார்த்தைகள் சரளமாக வந்தது. உள்ளம் ஒன்று நினைக்க உதடுகள் ஒன் றைப் பேசியது. டேங்க் கலந்து ஜூஸ் வந்தது. குடித்துவிட்டுக் கிளம்பி விட் டார்கள்.

போகும்போது ஒரு பெத்தா கூறினாள், 'வாக்கப்படுவது பற்றி உனக்குத் தெரி யாதது ஒன்னும் இல்லம்மா. இஸ்மாயீல் கன்னி தரத்து பையன். கல்யாணமே வேணாம்னு இருந்தான். குடும்பத்துப் பிள்ளை ஊர் பிள்ளை என்றவுடன் சம்மதிச்சான். யோசிச்சு முடிவெடு!'

அல்லாஹ்வே! என்ன வார்த்தை சொல்லி விட்டார்கள். நான் கன்னி இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டார்களே. துடித்து விட்டாள் சாலிஹா. கண்களில் நீர் கோர்த்தது.

ஃபாத்திமா கேட்டாள், 'அவங்க என்ன கேட்டாங்க.. நீங்க என்ன சொன்னீங்க மச்சி?'

'மதராஸ் போய் வேலையில் ஜாயின் பண்ண வேண்டும்' என்று சொன்னேன்.

'ஏன் மச்சி நான் உங்களுக்காக எவ் வளவு கஷ்டப்பட்டு இந்த வரனைப் பேசினேன். உங்களைத் தன்னந்தனியாக தூரத்தில் விட மனம் கேட்காமல் தானே இவ்வளவும் செய்தேன்?'

'இஷ்டமில்லா வாழ்க்கை நஷ்டத்தில் முடியும். நீங்கள் எவ்வளவு கேட்டாலும் அந்நிய ஆணை நான் சல்மான் என்று அழைக்க முடியாது புரிந்து கொள்ளுங்கள். நாளை உங்கள் அண்ணன் வருகிறார். அவருக்குத்தான் இந்த ஏற்பாட்டில் இஷ் டம். அவர்களிடம் பேசிக் கொள்ளுங்கள்'

தன் கணவனின் வருகை ஒரு முடிவை ஏற்படுத்தும் என்று நினைத்தாள் ஃபாத் திமா. வாசலில் சித்திமாவின் குரல் கேட்டது.

'என் தங்க மகளே.. ராஜாத்தி! என்ன காரியம் செய்ய இருக்கிறாய்? நான் கேள் விப்பட்டதெல்லாம் நெசமா?'

'வாங்க சாச்சி..!'

'என்ன காரியமா செஞ்சீங்க.. அவ னைப் பத்தி விசாரிச்சீங்களா? ஊரெல்லாம் இதே பேச்சா இருக்குதே? ஏற்கனவே அவளைப் பாழும்கிணற்றில் தள்ளி விட் டாச்சு. இப்போ என்ன அவசரம் அவளை அழிக்கப் பாக்கறீங்களா?'

சாச்சிமா ஒப்பாரி வைத்தாள். மர நாற்காலியை இழுத்துப் போட்டு.. 'இப் படி உட்காருங்க.. சாச்சிமா' என்று சொல்லிவிட்டு ஒன்றும் புரியாமல் முழித் தாள் சாலிஹா.

(தொடரும்)

# உலகப் பொதுமறை

**- சித்தி ரொக்கையா**

திருக்குர்ஆன்
அகில உலக மக்களுக்கும்
அழகான நல்லுரை

ஒருவரின் சொத்தல்ல இது
ஒரு குலத்தின் உரிமையல்ல
அப்துல் காதருக்கு மட்டும் அல்ல
அனைவருக்கும் பொதுவான வழிகாட்டி

இதன் வசனங்களில்
அலக்ஸாண்டருக்கும் செய்தி உண்டு
அய்யாக்கண்ணுக்கும் அறிவுரை உண்டு

எந்த விஷயத்தில் உனக்கு ஐயம் இருந்தாலும்
எதில் உனக்குத் தெளிவு தேவைப்பட்டாலும்
திறந்து படி திருக்குர்ஆனை

உன் மனம் தேடும் பதில்கள்
அதன் வசனங்களில் ஒளிந்திருக்கும்
தவறி நிற்கும் பாதையில்
திசை காட்டும் ஒளி அது

தொழுகையில் நீ
இறைவனுடன் உரையாடுகின்றாய்
குர்ஆன் ஓதும் பொழுது
இறைவன் உன்னுடன் உரையாடுகின்றான்

நீ கேட்கும் துஆக்கள்
அவனிடம் ஏறிச் செல்கின்றன
அவன் அருள் வசனங்கள்
உன் வாழ்வை வழிநடத்துகின்றன

கேள்
அது பேசும்
படி
அது வழி காட்டும்
நம்பு
அது நிம்மதி தரும்

மனிதன் யாராயினும்
மொழி இனம் கடந்து
நேர்வழி காட்டும் நித்திய ஒளியே
திருக்குர்ஆன்

## சித்திரம் பேசுது..!



J. பைஸியா நஸ்லி,
5ஆம் வகுப்பு, ராஜாஜி வித்யாலயா
சீனியர் செகண்டரி பள்ளி,
திருச்சி




K.K. ஃபாத்திமா தஃபீனா,
11ஆம் வகுப்பு, செயின்ட் பிலோமினாஸ்
பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருச்சி

# மினாப் பள்ளிச் சிறுமிகளே எமது பயணத் தோழர்கள்



இஸ்ரேல் அமெரிக்காவின் கூட்டுத் தாக்குதலுக்கு ஈரான் தக்க பதிலடியைத் தந்து அவர்களைக் கதி கலங்கச் செய்துவிட்டது. வேறு வழியின்றி அமைதிப் பேச்சு வார்த்தை, போர் நிறுத்தத்திற்கு ட்ரம்ப் இறங்கி வர வேண்டிய சூழலை ஈரான் ஏற்படுத்தி விட்டது. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற அமெரிக்காவுடனான பேச்சு வார்த்தைக்காக ஈரானிலிருந்து ஒரு விமானம் கிளம்பியது.

அந்த விமானத்தில் பயணிகள் இல்லை. மினாபில் படுகொலை செய்யப்பட்ட 168 சின்னஞ் சிறுமிகளின் புகைப்படத்துடன் அவர்களின் பள்ளிப் பையை விமான இருக்கை களில் வைத்து இந்த பேச்சுவார்த்தைக்கு ஈரான் புறப்பட்டு உலகின் மனசாட்சியை உலுக்கி எடுத்துவிட்டது.

ஈரானின் மினாப் பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளியின் மீது அமெரிக்காவின் டோமாஹாக் ஏவுகணை வீசப்பட்டதில் 168 பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்தன. முதலில் ஈரானின் மீது பழி போட்ட அமெரிக்கா இறுதியில் ‘இது ஒரு தவறான இலக்கு(Targeting Error)' என ஒப்புக் கொண்டது. இந்தப் பேச்சுவார்த்தை என்பது உயிரிழந்த பிஞ்சுக் குழந்தைகளுக்கான நியாயம் கேட்கும் நிகழ்வு என்பதை இந்தப் பயணத்தில் ஈரான் உணர்த்தியுள்ளது.

‘நல்லெண்ணம் உண்டு. ஆனால் நம்பிக்கை இல்லை. இந்தப் பயணத்தில் எனது தோழர்கள் மினாப் 168 (My companions on this flight Minab 168) என ஈரான் நாட்டின் நாடாளுமன்ற சபாநாயகர் முஹம்மது பாகர் காலிபாஃப் (Mohamed Bagher Ghalibaf) தமது x தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விமானத்தை காலிபாஃப் இயக்கினார் என்பது மிக முக்கியச் செய்தி. போர் பதற்றமான சூழலிலும் களத்தில் நின்று ஈரானின் சபாநாயகர் குழந்தைகளுடைய புகைப்படங்களுடன் தாமே விமானத்தை இயக்கிச் சென்றது உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இதற்கு முன் 2024 அக்டோபரில் இஸ்ரேலிய வான்வெளித் தாக்குதலுக்கு மத்தியில் தாமே ஓட்டிச் சென்று லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் விமானத்தை தரையிறக்கிய போராளிதான் காலிபாஃப்.

வீரமும், துணிவும், அறமும், ஆற்றலும் கொண்டு நீதிக்காகத் தம்மைத் தத்தம் கொடுக்கத் துணிந்த இத்தகைய ஆளுமைகள் ஈரான் முழுவதும் நிரம்பிக் கிடக் கின்றார்கள். அதுவே ஈரானின் வெற்றிக்கான காரணம். நீதி வெல்லும். ஈரான் வெல்லும்.

**- அமீரா முர்ஷிதா**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 May 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.


# Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium (a professional service) › DOMESTIC › INTERNATIONAL › CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com